**நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்குகின்ற "குழுமத்தின்" 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ''அதிகாரசபை'' அதன் துணைக் கம்பனிகளதும் ''குழுமத்தின்'' 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபை மற்றும் குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை வெளிப்படுத்தவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அபிப்பிராயமொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. மறுப்பு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை மற்றும் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுமத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபை மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபை மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபை மற்றும் குழுமத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை மற்றும் குழுமத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் குழுமத்தின் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான

கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ---------------------------------------------- | ---------------- |
| (அ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா.164,567.35 மில்லியனான அபிவிருத்திச் செலவினம் 117 கணக்குகளினுள் 1979 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 675 செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்தி செலவினங்களை உள்ளடக்கியிருந்தது. அந்த 675 செயற்திட்டங்களின் கீழ் நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறை வேலை, முதலீட்டு ஆதனங்கள், ஆதனங்கள் மற்றும் பொறிகள், கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோருக்கான செயற்திட்டங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் என 5 உருப்படிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் குறிப்பிடப்பட்டுள்ள இந்த செலவினங்கள் மேற்படி 5 உருப்படிகளுக்கு மூலதனமாக்கப்பட்ட பின்னரும் செலவின மீதி ஒன்றாக பரீட்சை மீதியில் முன் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவதானிக்கப்பட்டது. | மேற்படி கூற்றுடன் முழுமையாக இணங்க முடியாது. 2019.12.31 ஆம் திகதிய பரீட்சை மீதியில் மேற்படி கணக்கு இலக்கம் 115 மற்றும் பட்டோலை 5 இல் நிலவிய மீதிகளின் கூட்டுத்தொகை குறித்த வகைப்படுத்தலின் கீழ் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்திட்டங்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட வருமான செலவினங்கள் அந்தந்த கணக்குகளின் கீழ் குறிப்பிடப்பட்டு அபிவிருத்திச் செலவின பட்டோலையினுள் 05 பிரதான கணக்குகளின் கீழ் கணக்கு வைக்கப் பட்டுள்ளது. | ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமான செலவினங்களை இலகுவாக இனங்கான இயலுமான விதத்தில் கணக்கு வைக்கப்பட வேண்டியதுடன் பேரேடு, பரீட்சை மீதி மற்றும் நிதிநிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரே கணக்கு மீதிகள் சமனாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியில் முன்னைய வருடங்களின் சீராக்கங்களாக காண்பிக்கப்பட்டிருந்த 1984 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா.131.89 மில்லியன் பெறுமதியான 19 வரவு மீதிகள் மற்றும் ரூபா.74,389.77 மில்லியன் பெறுமதியான 03 செலவின மீதிகள் மற்றும் பரீட்சை மீதியில் 'RETSUP' எனும் பெயரில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா.993.27 மில்லியனான செலவின பெறுமதியும் நிதி கூற்றுகளில் | RETSUP ஆக காண்பிக்கப்பட்டுள்ள கணக்கில் வெளிப்படுத்தப்படுவது 2016.01.01 ஆம் திகதியில் நிலவிய நிறுத்தி வைக்கப்பட்ட மிகைகளின் மீதியாகும். அதாவது அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் அறிக்கை இடப்பட்டிருந்த இலாப மற்றும் நட்டங்களின் கூட்டுத்தொகையாகும். இந்த கணக்கின் மீதியில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாப கணக்கிற்கு மாற்றுவதற்கு | பரீட்சை மீதி மற்றும் நிதி கூற்றுக்களை கணக்காய்வில் பரீட்சிக்க கூடிய விதத்தில் சரியாக சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த கணக்கு மீதிகளின் சரியான தன்மை அல்லது நிலவுகையை உறுதிப்படுத்துவதற்கு பட்டோலை ஒன்றோ அல்லது உரிய சான்றுகளோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாததுடன் நிதி கூற்றுகளிலும் காண்பிக்கப்பட்டிராமைக்கு உரிய காரணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | பேரேட்டு இலக்கம் J31703 மூலம் 2020 ஆம் ஆண்டுகளின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | பேரேட்டு பதிவுகளை மேற்கொள்ளும் போது அந்த ஒவ்வொரு பேரேட்டு பதிவிக்கும் நிறுவனத்தின் உரிய அதிகார பலம், வரவு மற்றும் செலவின் கீழ் கணக்குகள், பெறுமதி, விபரங்கள் மற்றும் கணக்கின் பெயர், கோவை தொடர்பில் அல்லது தொடர்புடைய ஆவணங்கள், குறியீடுகள் போன்ற விபரங்கள் பதிவு செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் போதிய மற்றும் தகுதி வாய்ந்த உள்ளக கட்டுப்பாடொன்று முகாமைத்துவத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் 2019 ஆம் ஆண்டு உரிய 591 பேரேட்டு பதிவுகளின் மாதிரியினை பயிற்சித்த போது ரூபா.969.90 மில்லியன் பெறுமதியான 77 பேரேட்டுப் பதிவுகள் அந்த தகவல்களை உள்ளடக்கி இருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. | மேற்படி கூற்றுடன் இணங்கவில்லை. கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டில் பதியும் போது குறித்த நிதி உத்தியோகத்தர்களால் பேரேடுகள் தயாரிக்கப்படுவதுடன் அதற்குரிய மூல ஆவணங்களும் கோவைபடுத்தப்படும். பின்னர் அந்தந்த அலகுகளின் கடமைகள் சாட்டப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்துடன் மாத்திரம் பேரேட்டு கணக்குகள் பதிவு செய்யப்படும் உள்ளக நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் போது கணினி மயப்படுத்தப்பட்ட பேரேடுகளில் தவறுகள் காணப்படின் அதனை திருத்தி அங்கீகரிக்கும் அதிகாரம் காணப்படுவது குறித்த பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கே ஆகும். அவ்வாறல்லாது குறித்த கொடுக்கல் வாங்கல்களை கணினி கட்டமைப்பிற்கு உள்ளடக்க முடியாது. இந்த உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையை நடைமுறைப்படுத்தும் போது நிலவிய குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் கணக்கீடு தொடர்பில் முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டியதனை போன்று அவற்றை சரியாக நடைமுறைப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் 108 சந்தர்ப்பங்களில் ரூபா.1,110.72 மில்லியனான பணப் பெறுவனவு பேரேட்டுப் பதிவுகள் காசு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தன. அந்த 108 | முதிர்வடைந்த நிலையான வைப்புக்களின் கிடைத்த பணத்தை பதிவு செய்தல், கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர் நேரடியாக அதிகாரசபைக்கு செலுத்த | பணம் கிடைக்கும் வழிகளுக்கு வைப்பு இலக்கங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற நடைமுறைகளின் |

| | | |
|---|---|---|
| பேரேட்டு பதிவுகளில் 89 பேரேட்டு பதிவுகளின் பெறுமதி ரூபா.42.45 மில்லியனான தொகை காசு புத்தகத்திற்கு வரவு வைக்கப்பட்டு இனம் காணப்படாத காசாக குறியீட்டு பதிவு செய்யப்பட்டிருந்தது. கிடைக்கும் பணத்தை உடனடியாக இனங்காண இயலுமான வகையில் நிதிக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வேண்டிய முற்பண கட்டணங்களின் கணக்கு வைத்தல்கள், அதிகாரசபைக்கு சொந்தமான கணக்குகளுக்கு இடையேயான பண மாற்றங்கள், திட்டங்களை அங்கீகரிக்கும் போது குறித்த விண்ணப்பங்களை இணைய வழிமுறையின் மூலம் நேரடியாக வாய்ப்பு செய்தல் ஆகியவற்றுக்கு பேரேட்டு பதிவுகள் பயன்படுத்தப்படும். அவ்வாறான வைப்புக்களுக்கு உரிய வங்கி பற்றுச் சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுப்பதுடன் இனம் காணப்படாத வருமானமாக பேரேட்டு பதிவுகளின் மூலம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | ஊடாக பணப்பெறுவனவுகளை குறுகிய காலத்தில் இனம்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 01** | | |
| (i) நிறுவனத்தினால் பேணப்படும் ஒதுக்கங்களின் தன்மை மற்றும் அவற்றை பேணுவதற்கான நோக்கங்கள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு வரையிலான மூலதன மாற்றங்களிலான கூற்றின் காணப்பட்ட மூலதன ஒதுக்கங்கள் மீளாய்வாண்டில் அதிலிருந்து அகற்றப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. இந்த சீராக்கத்தின் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான காரணங்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதி கூற்றுகளில் அது தொடர்பில் உரிய வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1999 ஆம் ஆண்டில் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த நகர செயற்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தின் மூலதன ஒதுக்கங்களாக நிலவிய ரூபா.7 மில்லியனான தொகை அதிகார சபையின் ஒதுக்கமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்தும் ஒதுக்கங்களாக பேணிச் செல்லும் தேவைப்பாடு காணப்படாமையால் 2019 ஆம் ஆண்டில் இந்த 2 ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா.8.4 மில்லியனான தொகையை நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தின் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கங்களை மாற்றும் போது நியமத்திற்கமைய உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அறிக்கையிடல் நியமத்தினால் தேவைப்படுத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்று நீங்கலாக வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட கூடாத போதிலும் ஆண்டினுள் மதியுரை சேவைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூபா.1.92 மில்லியன் கழிக்கப்பட்டு மதியுரை கட்டண வருமானம் ரூபா.85.14 மில்லியனாக நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டமையால் மதியுரை கட்டண வருமானம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டது. | செயற்திட்டத்திற்காக மதியுரை சேவைகளை வழங்கும் போது அதிகாரசபையினுள் குறித்த ஆளணி இல்லாதிருந்தமையின் அடிப்படையில் சில செயற்திட்டங்களுக்காக MEP மதியுரைகள் வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த கட்டணம் அதிகாரசபையின் வருமானம் ஒன்று அல்ல என்பதால் செலுத்திய மதியுரை கட்டணங்கள் அந்த கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. | வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கு வைக்கும் போது உரிய நியமத்திற்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் - 15** | | |
| | நியமத்தின் 35 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானங்களை இனம் காணுவதற்கு கிரய உள்ளீட்டு முறைமை அல்லது சான்றுபடுத்தப்பட்ட பணி முறைமை பின்பற்றப்பட வேண்டும். எனினும் அதிகார சபையினால் வீடுகளை நிர்மாணிக்கும் போது அரச நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு வீடுகளின் விற்பனை விலையை தீர்மானித்து அதற்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திரப்பட்டிருந்தன. இதற்கமைய மீளாய்வாண்டின் இறுதி அளவில் அரச நிறுவனங்களுக்கு வீடுகளை விற்பனை செய்தமையால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மொத்த நட்டமான ரூபா.443.07 மில்லியன் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் பொருண்மையான வழுக்களை முன்னோக்கி மீண்டும் வெளிப்படுத்தப்படக்கூடிய வகையில் சீராக்கம் செய்யாது கடந்த வருடத்தில் மாத்திரம் சீராக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | அரச நிறுவனங்களுக்கு வீடுகளை வழங்கும் போது அவற்றின் விற்பனை விலை அந்த செயற்திட்டங்களுக்குரிய மதிப்பிடப்பட்டு கிரயத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் அவ்வாறு வீடுகளை அகற்றுவதற்கு உரியதாக இனம் காணப்பட்ட மொத்த நட்டமான கடந்த வருடத்தின் சீராக்கல்களாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதாவது வீடுகளை கொள்வனவு செய்வதற்குரிய வீடுகளின் பௌதீக ரீதியில் மற்றும் சட்ட ரீதியான உரித்தினை மீளாய்வாண்டில் வீடுகளை கொள்வனவு செய்தோருக்கு மாற்றப்பட்ட போதிலும் பணப் பெறுவனவுகள் மற்றும் இரு தரப்பினருக்கிடையேயான உடன்படிக்கைகளை மேற்கொள்ளல் கடந்த வருடத்தில் இடம்பெற்றமை ஆகும். | வருமானத்தினை இனங்காணல் மற்றும் கடந்த வருட நட்டத்தினை இனம் காணல் நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

**(இ) இலங்கை நிதி அறிக்கையிடல் - 16**

| | | |
|---|---|---|
| (i) நியமத்தின் 63(அ) பந்தியின் பிரகாரம் பெறுவனவுகளின் இற்றை பெறுமதி, செலவினங்களின் இற்றை பெறுமதிக்கு சீராக்கப்பட்டு இலாப / நட்டங்களை இனங்காணல் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கமைய குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்த பின்னர் குடியேறுவதற்கு வீடுகளை வழங்கும் போது மாதாந்தம் ரூபா.3,000 படியாக 30 வருடங்கள் வரையிலும் பணம் அறவிடும் அடிப்படையில் சொத்துக்களை சுவீகரித்தல் நிதி குத்தகையாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அந்த தவணை பெறுவனவுகளின் இற்றை பெறுமதி, செலவினங்களின் இற்றை பெறுமதிக்கு சீராக்கப்பட்டு இலாப / நட்டங்களை இனங்காணல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. வீடுகளை பெறும் நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்ட 5083 வீடுகளுக்கு உரியதாக கிடைத்த அரச மானியமான ரூபா.24,098.92 மில்லியனில் ஆண்டுக்கு உரியதாக இனற்காணப்பட்ட வருமானம் மற்றும் அந்த குறைந்த வருமானம் பெறுபவர்களிடமிருந்து கிடைத்த பெறுவனவுகளில் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக 12% கழிவின் அடிப்படையில் இற்றைப் பெறுமதியான ரூபா.1,739.68 மில்லியன் ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையான ரூபா.25,838.60 மில்லியனான வருமானம் அந்த வீடுகளை நிர்மாணிப்பதற்காக | சமூக தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அரசின் தேவைக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டம் ஒன்றானமையால் காணியின் பெறுமதி செயற்திட்டத்தின் இலாபம் / நட்டத்தினை கணிப்பிடும் போது கருத்திற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே இந்த நிர்மாணங்களின் கிரயத்தை உள்ளடக்கி அரசினால் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த புனரமைப்பின் பின்னர் கிடைக்கும் காணிகள் வணிக நடவடிக்கைகளுக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானமும் இந்த செயற்திட்டத்தின் கிரயத்தை உள்ளடக்குவதற்கு கருதிற்கொள்ளப்படும். அவ்வாறே பொதுமக்கள் குறித்த வீடுகளில் குடியேற்றப்பட்ட போதிலும் அவர்களுக்கு குறித்த வீடுகளின் முழுமையான உரிமை இதுவரையிலும் வழங்கப்படவில்லை. அதற்கமைய நியம இலக்கம் 16 இன் பிரகாரம் நிதி குத்தகையாக கருத்திற்கொள்ளப்பட்டு மேற்படி வீடுகளை அகற்றுவதற்கு கணக்கு வைக்க முடியாது. | நியமத்திற்கமைய உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூபா.16,645.22 மில்லியனிலிருந்து கழிக்கப்பட்டதால் இனங்காணப்பட்ட இலாபமான ரூபா.9,193.38 மில்லியன் முன்னெச்சரிக்கை எண்ணக்கருவின் பிரகாரம் அரசமானியமாக கணக்கு வைப்பதற்காக நியம இலக்கம் 20 இன் பந்தி இலக்கம் 30 இன் பிரகாரம் விரிவான வருமான கூற்றினுள் இனங்கானப்பட வேண்டிய போதிலும் அதற்காக அதிகாரசபையினால் குறைந்த வருமானம் பெறுபவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா.780.58 மில்லியனான தவணைப்பணம் அரசமானிய முற்பணங்களாக கணக்கு வைக்கப்பட்டு அரசமானியங்களில் இருந்து அதுவரையிலும் நிறைவு செய்யப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்படாத வீடுகளுக்காக செலவிடப்பட்ட தொகையில் அரசு நிறுவனங்களுக்கு சாட்டப்பட்ட வீடுகளுக்கான கிரயத்தினை கழித்து எஞ்சிய தொகையான ரூபா.37,082.46 மில்லியன் நிதி கூற்றுகளில் நிலையான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டு பெறுமானத் தேய்வு செய்யப்படாது காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | நியமத்தின் பந்தி இலக்கம் 81 இன் பிரகாரம் குத்தகை வழங்குநரால் செயற்பாட்டு குத்தகைகளில் குத்தகை பெறுவனவு வருமானம் எளிமையான முறையில் அல்லது ஏனைய முறைமை ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட வேண்டும். அதிகாரசபையின் சொத்துக்களை நீண்ட கால அடிப்படையில் வழங்கிய பின்னர் குத்தகை பெறுமதி அந்த குத்தகை காலம் முழுவதும் அதிகாரசபையின் | அதிகாரசபையின் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நீண்ட கால அடிப்படையில் காணிகளை விடுவித்தல் ஆரம்பம் முதலே இடம்பெற்றுள்ளது. அதற்கமைய முன்னர் அந்த காணிகளை விடுவிக்கும் போது குத்தகை வழங்கும் காலப்பகுதி மற்றும் அறவிடப்படும் நடைமுறை பல்வேறு அடிப்படைகளில் வழங்குதல் இடம்பெற்றுள்ளது. சொத்துக்களை நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு | நியமத்தின் பிரகாரம் குத்தகை வருமானத்தை சரியாக இனம் கண்டு நிதி கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த வருமானத்திற்கு எடுக்கும் ஒரே தன்மையிலான முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுகளில் ஒவ்வொரு செயற்திட்டங்களின் கீழ் குத்தகை வழங்குதல் மற்றும் வருமானங்களை கணக்கு வைத்தல் மாதாந்தம், வருடாந்தம், நிவாரண காலம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு முறைமைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது . | வழங்கிய பின்னர் குத்தகை பெறுமதியான அந்த காலம் முழுவதும் அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுப்பது ஒரே முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பிற்போடப்பட்ட குத்தகை கணக்கில் காணப்படும் கணக்கிட்டு வழுக்களின் காரணமாக குறித்த வருமானங்கள் ஒரே முறையில் கணக்கு வைக்கும் கணக்கு வைக்கப்படாத சந்தர்ப்பங்களும் காணக்கூடியதாக உள்ளது. குத்தகை கணக்கினை திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | |
| (iii) | நியமத்தின் 89 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படுத்தல்களை நோக்கம் நிறைவேறுவதற்கு நியமத்தின் 92 ஆம் பந்தியின் (அ) இன் பிரகாரம் குத்தகை வழங்குநரின் குத்தகை நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அதன் (ஆ) பந்தியின் பிரகாரம் குறித்த சொத்துக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட உரித்துடன் தொடர்புடைய அச்சுறுத்தல் குத்தகை வழங்குநரின் முகாமைக்கு உட்படுத்தப்படுவது எவ்வாறு என்பது தொடர்பிலான முகாமைத்துவ மூலோபாயங்களை வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்குகமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் பெரும் எண்ணிக்கையிலான ஆதனங்கள் (சுமார் 5000) பல்வேறு குத்தகை காலப்பகுதிகளின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளமையால் அந்த ஒவ்வொரு ஆதனங்களுக்கு உரிய விடயங்கள் நிதிக்கூற்றுகளில் காண்பித்தல் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதால் காணிகளை அகற்றும் பொது நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அச்சுறுத்தலை குறைத்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன் அந்த விடயம் முதலீட்டு ஆதனங்கள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டு கட்டமைப்பை நாளது வரையாக்கி கணக்குக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்திற்கமைய நிதிக்கூற்றுக்களின் ஊடாக சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| **(ஈ)** | **இலங்கை கணக்கீட்டு நியமம் - 16** | | |
| | நியமத்திக்கமைய முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போது | சொத்துதுக்களை மீள் மதிப்பீடு செய்தல் அது தொடர்பில் அறிவுடைய | நியமத்திக்கமைய முழுமையாக தேய்விடப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தினை மீள மதிப்பிட்டு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை திருத்தி சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயுட்காலத்திற்கான சீராக்கங்களை நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு பட்டோலையின் பிரகாரம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் கிரயம் ரூபா.606.80 மில்லியனான சொத்துக்கள் தொடர்பில் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தரப்பினரின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியமையால் மற்றும் அதற்கு கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான காலம் கடக்கின்றமையால் குறித்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து அதனுடன் தொடர்புடைய சீராக்கங்கள் 2021 கணக்குப் புத்தகங்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| **(உ)** | **இலங்கை கணக்கீட்டு நியமம் - 17** | | |
| | நியமத்தின் பந்தி இலக்கம் 47 இன் பிரகாரம் நிதி நிலைமைக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா.43,499.43 மில்லியனான பிற்போடப்பட்ட குத்தகை வாடகை தொடர்பில் போதிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டு தகவல்களின் அடிப்படையில் கணக்கு கூற்றுக்களில் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்ககளில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவிக்கின்றேன். | குத்தகை வாடகை வருமானம் தொடர்பில் போதிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| **(ஊ)** | **இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 – முதலீட்டுச் சொத்துக்கள்** | | |
| (i) | நியமத்தின் 16 ஆம் பந்திக்கு முரணாக வருமானம் ஈட்டாத நகர அலங்காரப் பணிகளுக்கு 06 செயற்திட்டங்களக்கு செலவிடப்பட்ட ரூபா.35.81 மில்லியன் மற்றும் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 23 செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா.14,360.77 மில்லியன் மற்றும் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியின் பிரகாரம் பதிவழிக்கப்பட்ட | 2022 ஆம் ஆண்டின் கணக்குக்கூற்றுக்களில் சரியான வகைப்படுத்தலின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களை இணங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

தொகை ரூபா.18.10 மில்லியன் அதிகாரசபைக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகளில் முதலீட்டு ஆதனங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 30, 32(அ) மற்றும் 34 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களுடன் 33-35 பந்திகளில் காண்பிக்கப்படும் கொண்டு செல்லும் பெறுமதி மாதிரி அல்லது 56 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய மாதிரி நிறுவனம் ஒன்றினால் அதன் கணக்கிட்டு கொள்கையாக தெரிவு செய்யப்பட வேண்டும். நியமத்தின் பந்தி இலக்கம் 53 இன் பிரகாரம் நியாய பெறுமதி நம்பகரமாக அளவிடும் இயலுமை காணப்படாத சந்தர்ப்பம் ஒன்று நீங்கலாக தெரிவு செய்யப்பட்ட கொள்கை அனைத்து முதலீட்டு ஆதனங்களையும் கணக்கு வைக்க பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் தெரிவுக்கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அதிகார சபையினால் சில முதலீட்டு ஆதனங்கள் கிரயத்திற்கும் சில அவை மீள் மதிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கும் இன்னும் சில சந்தர்ப்பங்களில் இரு பெறுமதிகளிலும் கூட்டுத்தொகை ஒன்றாக கணக்கு வைக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனங்களை கணக்கு வைத்தல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு சபையின் அறிவுரைகளை பெற்று அதற்கமைய கணக்கு வைத்தல் மேற்கொள்ளுமாறு கணக்காய்வு கலந்துரையாடலில் அறிவுரை வழங்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் அதற்கமைய நடவடிக்கை

முதலீட்டு ஆதனங்களினுள் உள்ளடங்கியுள்ளது அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகும். அந்த ஆதனங்கள் பல்வேறு அபிவிருத்தி பணிகளுக்கு வெளிவாரி தரப்பினருக்கு 30, 50 மற்றும் 99 வருடங்கள் எனும் நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2012 ஆம் ஆண்டில் உள்ளக மதிப்பீட்டுக் குழு ஒன்றின் ஊடாக அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட ஆதனங்கள் நீங்கலாக ஏனைய முதலீட்டு ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு தகைமை வாய்ந்த பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் கணக்காய்வு உதவியுடன் 2011.01.01 ஆம் திகதிக்கு காணப்பட்ட பெறுமதிகள் கணக்கு புத்தகங்களில் சீராக்கப்பட்டுள்ளது. இதன் போது 99 வருடங்களாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த முதலீட்டு ஆதனங்கள் ஆதனங்களின் வரலாற்று கிரயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டமைக்கு இந்த காணிகள் அரசுக்கு சொந்தமாக காணப்பட்டதுடன் அவை கணக்கு புத்தகங்களில் முழுமையாக அகற்றப்பட்டால் அது தொடர்பில் எந்த ஒரு விபரத்தினையும் பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படாமையின் அடிப்படையில் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் ஆகும்.

குத்தகை ஆதனங்கள் தொடர்பில் கணக்கு வைக்கும் போது நியமத்திற்கமைய திட்டவட்டமான கணக்கிட்டு கொள்கை ஒன்று தெரிவு செய்யப்பட்டு பின்பற்றப்பட வேண்டும்.

எடுக்கப்பட்டிருக்கவில்லை

| | | | |
|---|---|---|---|
| (iii) | நியமத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் முதலீட்டு சந்தர்ப்பங்களில் முதலீடு செய்வதற்கு உத்தேசித்திருப்பின் அந்த ஆதனங்களையும் முதலீட்டு ஆதனங்களாக கணக்கு வைக்கப்பட வேண்டும். எனினும் காணிகள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரின் 2021 மார்ச் 11 ஆம் திகதிய கடிதத்திற்கமைய பாராளுமன்ற காணிகளுக்குரிய 1,167 ஏக்கர்கள் பரப்பளவான காணியில் 37 ஏக்கர்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி செயற்திட்டமாக வேறுபடுத்தி காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த காணியின் துண்டுகள் தனித்தனியாக இனங்காணப்பட்டு பெறுமதி மதிப்பிடப்பட்டு முதலீட்டு சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் அந்த காணிகளை இனங்காணக்கூடிய விபரமான பட்டோலைகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்த காணிகளின் அளவானது ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அக்காணிகளின் அளவின் பெறுமதியானது 2021 ஆம் ஆண்டில் உரிய முறையில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்கு சொந்தமான முதலீட்டு சொத்துக்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா.21,948.47 மில்லியனான முடிவுறுத்தப்படாத வேலைகளினுள் ஏனைய நிறுவனங்களுக்கு நிறைவு செய்யப்பட்ட ரூபா.112.93 மில்லியன் கிரயமான 03 செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால் புத்துருவாகும் வேலை அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. புத்துருவாகும் வேலைக்காக 2004 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட ரூபா.13.85 மில்லியனான ஒதுக்கங்களை திட்டவட்டமாக இனங்கண்டு உரிய சீராக்கங்கள் | இடம்பெறக்கூடிய நிச்சயமற்ற தன்நிலைமைகளுக்காக புத்துருவாகும் வேலைகள் கணக்கில் ரூபா.13.85 மில்லியனான சராசரி ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஒதுக்கம் 2004 ஆம் ஆண்டு முதல் மாற்றமின்றி பேணிச் செல்லப்பட்டிருந்தது. | புத்துருவாகும் வேலை கணக்கு நிறைவடைந்தவுடன் நிலையான சொத்துக்களுக்கு உடனடியாக மாற்றப்பட வேண்டியதுடன் அதற்கு சராசரி ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படாது. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா.1.65 மில்லியனான மறை பெறுமதி ஒன்று சீராக்கப்பட்டமையால் கூட்டுத் தொகையானது அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டது. | | |
| (ஆ) | அதிகாரசபையின் 2019 நிதி செயலாற்றல் கூற்றில் வருமானங்களின் கீழ் மிதக்கும் வணிக தொகுதி செயற்திட்டத்திற்காக கடந்த வருடங்களில் கூடுதலாக இனங்காணப்பட்டிருந்த வருமானம் ரூபா.4.22 மில்லியனான Key money வருமானம் கடந்த வருடங்களுக்கு உரியதாக திருத்துவதற்கு பதிலாக அச் செயற்திட்டத்திற்கு உரிய மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனால் திரண்ட இலாபம் அதிகரித்தும் மீளாய்வாண்டின் இலாபம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது . | 2018 ஆம் ஆண்டிற்கான மிதக்கும் வர்த்தக கட்டிடத் தொகுதியின் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டோரிடமிருந்து பெறவேண்டிய கட்டுநிதி கணினி கட்டமைப்பில் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் அந்த அளவானது மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக தவறுதலாக பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணினி கட்டமைப்பிற்கு தரவுகளை உள்ளீடு செய்தல் மற்றும் அவற்றை அங்கீகரித்தல் முறையான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பெறுமானத்தேய்வு சதவீதத்தின் பிரகாரம் பெருமானத்தேய்விட கூடிய காலம் நிறைவடைந்து 2 முதல் 15 வருடங்கள் கடந்திருந்த சொத்துக்களுக்கு தவறுதலாக சீராக்கும் மேற்கொண்டமையால் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக அச்சொத்துக்களுக்கு ரூபா.37.82 மில்லியன் பதிவழிக்கப்பட்ட தொகை நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுகளில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பதிவழிக்கப்பட்ட பெறுமதி அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இதனை 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் கடந்த வருடத்தின் சீராக்கங்களாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்குகளில் சீராக்கும் மேற்கொள்ளல் சரியாகவும் போதிய கண்காணிப்புடனும் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு கணிப்பீட்டின் போது ரூபா.7.19 மில்லியன் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்த | 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு கணிப்பீடு மற்றும் கணக்கு வைத்தல் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தால் ஆண்டிற்கான இலாபம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | அம்பாந்தோட்டை சிரிபோபுர நிர்வாக கட்டிடத் தொகுதியின் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்பு தொகுதிகள் 22 இன் 2019 இற்காக அதிகார சபைக்கு உரித்தற்ற ரூபா.13.96 ஆன வாடகை வருமானம் அதிகாரசபையின் வாடகை வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ வீடமைப்பு தொகுதியின் வருமானம் இதுவரையிலும் அம்பாந்தோட்டை பேருந்து நிலைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழேயே கணக்கு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் தற்போது அவற்றின் உரித்து நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது. | 2019 ஆம் ஆண்டளவில் உரித்தில்லாதிருந்த காரணத்தால் கணக்கு வைக்க முடியாது. |
| (ஊ) | வங்கியினால் அறவிடப்பட்ட ரூபா.10.21 மில்லியனான வங்கி கட்டணங்கள் மற்றும் காசோலை புத்தகக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் ஆண்டின் செலவினம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கிட்டு கட்டமைப்புக்கு மாறும் போது அந்த கட்டமைப்பிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்படுத்தல்களை மேற்கொள்வதற்கு போதிய காலம் எடுக்கின்ற காரணத்தாலும் இணைய வழிமுறையின் ஊடாக விண்ணப்பிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வங்கி இணக்கக்கூற்றினை தயாரிக்கும் நடைமுறையில் தாமதமானது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளினுள் ஏற்பட்டது. அதன் காரணமாக குறிப்பிடப்பட்டுள்ள தொகை செலவு வைக்கப்படவில்லை. எனினும் குறித்த சீராக்கமானது அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கட்டமைப்பினை பயன்படுத்தும் நோக்கமானது மிகவும் சரியானதும் நாளது வரையானதுமான வகைப்படுத்தலை பேணி செல்லல் ஆகும். அதனால் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை மிகவும் சரியாக நாளது வரையாகவும் உரிய கண்காணிப்புடனும் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (எ) | ரூபா.32.07 மில்லியனான கடன்பட்டோர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டு இருந்தது. அழிவு நட்டங்களுக்கான ஒதுக்கங்கள் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் மொத்த வருமானமானது அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரம் இன்றி பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டு எஞ்சிய மீதிகள் J 31730 இன் கீழ் மீண்டும் கடன்பட்டோராக 2020.12.31 ஆம் திகதியில் உள்ளபடியாக கணக்கு வைக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கங்கள் மற்றும் பதிவழித்தல் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டியமை மற்றும் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |
| (ஏ) | ஏனைய அரசு நிறுவனங்களுக்காக | சில செயற்திட்டங்களின் செலவினங்களை ஈடு செய்த | செயற்திட்டங்களை கணக்கு வைப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களுக்கு பெற்றுக்கொள்ளப்படவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை தனித்தனியாக காண்பிப்பதற்கு பதிலாக ஒன்றுக்கொன்று ஈடுசெய்து காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் செயல்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பணம் நடைமுறை பொறுப்பின் கீழ் ரூபா.4,632.97 மில்லியன் மற்றும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா.3,746.88 மில்லியன் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பின்னர் தொடர்ந்தும் பல்வேறு செயற்திட்ட இலக்கங்களின் கீழ் எஞ்சிய மீதி 2021.12.31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா.1,260.44 மில்லியன் மூலதன செலவினமாக கொடுக்கல் வாங்கல் வைப்புகளுக்கு எதிராக பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிடைக்க பெற்றுள்ள பணம் குறித்த செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு எதிராக மாத்திரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சில வைப்புக்கள் தற்போது சுமார் 30 வருட காலங்களுக்கு முன்பிருந்து கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் தகவல்களை பெற்றுக்கொள்ள உரிய மூல ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை தேட முடியாதுள்ளது. இவ்வாறு நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் மீதிகள் உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான கணக்கீட்டு கொள்கை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஐ) | நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசமானிய பங்களிப்பினுள் செத்சிரிபாய நிர்வாக கட்டிடத் தொகுதிக்கு மேற்கொள்ளப்பட்ட அரசமானியங்கள் ரூபா.679.58 மில்லியனாக காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா.357.39 மில்லியனுக்கு காலக்கழிவாக ரூபா.7.15 மில்லியன் வருமானக்கூற்றில் பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதனால் அந்த அளவினால் மீளாய்வாண்டின் இலாபம் குறைத்து | கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்வதற்கு தேவை ஏற்படின் குறித்த ஆவணங்களை பரிசோதித்து 2020 ஆம் ஆண்டின் கணக்கீட்டு வருடம் முதல் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அரச மானியங்களுக்கான காலக்கழிவு நியமங்களின் பிரகாரம் இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக வேறு தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் உரித்து கையளிக்கும் அடிப்படையில் அல்லது வருடாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 214 ஏக்கர்கள் 01 ரூட் 16.8 பேர்ச் பரப்பளவான காணி உள்ளடங்களாக பாராளுமன்ற காணிக்கு உரிய 1,167 ஏக்கர்கள் 03 ரூட் 86.9 பேர்ச்கள் பரப்பளவான காணி நிதிக்கூற்றுகளில் முதலீட்டு சொத்தாக ரூபா.3,975.03 பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் அகற்றப்பட்ட ஆதனங்களான 214 ஏக்கர்கள் 01 ரூட் 16.8 பேர்ச் பரப்பளவான காணியானது ரூபா.5,881.64 மில்லியன் பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்கள் ரூபா.1,906.61 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த அறிக்கையினை தயாரிக்கும் போது 2019 ஆம் ஆண்டின் புதிய மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டவாறு காணப்பட்டமையால் குறித்த காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியை சரியாக சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. அதனால் அவற்றை அகற்றும் திகதியில் காணியை அகற்றுவதற்கு எடுத்த பெறுமதி குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படுவது 2012 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டு பெறுமதியாவதுடன் 2021 ஆம் ஆண்டின் புதிய காணி மதிப்பீட்டின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களை கணக்கு வைத்த பின்னர் சரியான பெறுமதி கணக்கில் காண்பிக்கப்படும். | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகளுக்குரிய பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகள் தொடர்பில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஓ) | பேலியகொட வெயா ஹவுஸ் கம்பெனியினால் ரூபா.11.31 மில்லியன் கிரயத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட 5 மோட்டார் வாகனங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கையளிக்கப்பட்டு கம்பனியின் நிதிக்கூற்றுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மேலும் ரூபா.14.28 மில்லியன் கிரயமான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் அதிகாரம் உடைய உத்தியோகத்தரின் கையொப்பமின்றி பதிவேடுகளின் மூலம் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டதாக | கம்பனியினை கலைக்கும் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்பிருந்து வாகனங்கள் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. இந்த சொத்துக்களை கலைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் வரையிலும் PWCC கம்பெனியின் சொத்துக்களாக கணக்கு புத்தகங்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கலைப்பவரால் கலைக்கும் கணக்குகளை சமர்ப்பித்த பின்னர் குறித்த சொத்துக்களை கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 10 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக கலைக்கும் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. அதனால் இந்த சொத்துக்கள் சுமார் 10 வருடமாக கணக்கு வைக்கப்படாது இருந்தமையால் அந்த கலைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த சொத்துக்களை கையேற்ற சந்தர்ப்பத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பெறுமதியிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்காமையால் அதிகாரசபையின் அல்லது குழுமத்தின் கணக்குகளில் அந்த சொத்துக்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | பிற்போடப்பட்ட குத்தகை வாடகை பொறுப்பு மீதியினுள் 05 செயற்திட்டங்களுக்கு உரிய ரூபா.21.02 மில்லியனான வரவு பெறுமதி ஒன்று பிற்போடப்பட்ட குத்தகை வாடகை பொறுப்பிலிருந்து ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் பிற்போடப்பட்ட குத்தகை வாடகை பொறுப்புக் கணக்கு அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆவணங்கள் தொடர்ந்தும் பரீட்சிக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுபவரின் இலக்கத்தை கண்டறிந்த பின்னர் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை பதிவேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். |
| (க) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு உள்ள அதிகாரங்களின் பிரகாரம் பல்வேறு அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு தேவையான காணிகளை சுவீகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். எனினும் அந்த நிறுவனங்களுடன் அவர்களுக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டமைக்கான எழுத்து மூல இணக்கப்பாட்டிற்கு அதிகாரசபை வந்திருக்கவில்லை. அதனால் அந்த காணிகள் அதிகாரசபைக்கு சாட்டப்படும் போது வெளிவாரி காணி உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகை அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய போதிலும் அந்த பணத்தை உரிய திகதியில் குறித்த நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபைக்குப் | அதிகார சபையினால் இதுவரையிலும் வேறு அரச நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து காணி சுவீகரித்தல் பணிகளுக்காகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய மொத்த மதிப்பிடப்பட்ட நட்டஈடு மற்றும் வட்டித் தொகை விடயத்துக்குரிய காணித் துண்டினை சுவீகரிக்கும் அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசின் சொந்தமாக்குவதற்கு உரிய விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு முன்னர் குறித்த நிறுவனத்தினால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வைப்புச் செய்யப்பட வேண்டும் எனும் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனினும் ஆரம்ப காலத்தில் கிடைக்கும் பணத்தின் பிரகாரம் குறித்த நட்டஈட்டுத் தொகை வழங்குவதற்கு நடவடிக்கை | காணிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வெளிவாரி தரப்பினருடன் உரிய முறையில் அறவிடல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டு அதற்கமைய கணக்குகள் சரியாக பேணப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய மற்றும் வெளிவாரி தரப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தின் அளவு எவ்வளவு என்பது தொடர்பில் திட்டவட்டமாக இனங்காணக்கூடிய முறையில் பதிவேடுகள் பேணப்பட்டிராத காரணத்தால் அதிகாரசபையினால் காணிகளை சுவீகரிக்கும் போது மற்றும் வெளிவாரி தரப்பினருக்கு செலுத்த வேண்டிய பணம் மற்றும் வெளிவாரி தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் சரியாக கணக்கு வைக்கப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படவில்லை. உதாரணமாக கணபதி கல்லூரிக்கு இரண்டு மாடி கட்டிடம் ஒன்றினை நிர்மாணிக்கும் காணிக்காக 1990 செப்டம்பர் 26 ஆம் திகதி நட்டஈடு மீளாய்வு சபையின் வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா.4.17 மில்லியனான நட்டஈட்டுத் தொகையில் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபா.2.58 மில்லியனான தொகை மாத்திரம் அதிகாரசபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய தொடர்ந்தும் செலுத்த வேண்டிய நட்டஈட்டுத்தொகை மற்றும் வட்டி தொகை முறையே ரூபா.1.58 மில்லியன் மற்றும் ரூபா.14.09 மில்லியனாக காணப்பட்டதுடன் அந்த கடப்பாடுகள் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொண்டமையால் பதிவேடு ஒன்று தயாரிக்கப்படவில்லை. குறித்த ஆவணங்களை பரீட்சித்து அதற்கமைய பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் வெளிவாரி தரப்பினருக்கு நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் இடம்பெற்றுள்ளது. எவ்வாறான போதிலும் கணக்காய்வினால் சுட்டி காண்பிக்கப்பட்டதன் பின்னர் ஏனைய நிறுவனங்களுக்காக பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய நட்டஈட்டு அளவினை குறிப்பிட்டு விரிவான பதிவேடொன்று 2022 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்டு கணக்குகளுக்கு சீராக்கல் மேற்கொள்ள உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (கா) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் அமுலாக்கப்படும் வகையில் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றின் பிரகாரம் அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா.598,326.14 மில்லியனாக | 2012 ஆம் ஆண்டின் இலங்கை கணக்கீட்டு நியமங்களில் உள்ளீர்ப்பு நடவடிக்கையில் இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 1 இன் பிரகாரம் செயற்திட்டம் ஒன்றின் இரு மேலதிக சந்தர்ப்பங்களிடையே முதலீட்டு ஆதனங்களின் | காணிகளின் நிலவும் சந்தை பெறுமதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு பெறுமதிக்கு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| பெறுமதி இடப்பட்டு மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றில் குறிப்பொன்றாக முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் நிதி நிலைமைக்கூற்றில் காணிகள், கட்டிடங்களின் பெறுமதியாக ரூபா.137,181.32 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த மீள் மதிப்பு அதிகாரசபையின் பணிப்பாளராக சேவையாற்றி 2021 மார்ச் 19 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகத்திற்கு ரூபா.1.125 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கிரயத்தின் அடிப்படையில் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டது. அத்திகதியில் உள்ளபடியாக அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் ஆதனங்களின் மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு (99 வருட குத்தகை ஆதனங்கள் நீங்கலாக) அந்த பெறுமதிகள் அதிகதியில் உள்ளபடியான கிரயமாக கருதி கணக்குகளில் சீராக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மதிப்பீட்டு அறிக்கையின் மொத்த பெறுமதியான ரூபா.598,326.14 மில்லியன் பெறுமதியானது 03 பிரதான வகைப்படுத்தல்களின் கீழ் 2019 ஆம் ஆண்டில் கணக்குகளுக்கு வெளிப்படுத்தலொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய இதுவரையிலும் அதிகாரசபையினால் முதலீட்டு சொத்துக்கள் தொடர்பில் பின்பற்றப்படும் கணக்கீட்டு கொள்கையான கிரயத்தினை வெளிப்படுத்தும் அடிப்படையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக) ரூபா மில். | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி (2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக) ரூபா மில். | வேறுபாடு ரூபா மில். | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வாடகை வருமானக் கடன் பட்டோர் | 1,358.92 | 1,389.57 | 30.65 | 2021.12.31 ஆந் திகதியில் குறித்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகள் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டுக்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ மற்றும் மதியுரை சேவைகளின் பெறுவனவு | 78.71 | 135.31 | 56.59 | மதியுரை கட்டணங்களுக்கபக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்று கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | காரணமாக அமைந்த விடயங்கள் இனங்காணப்பட்டு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | அட்டுறு மிகையூதியம், மருத்துவ உதவிகள் | 122.86 | 78.34 | 44.52 | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பெற வேண்டிய கடன் தவணைகள் (UDSP) | 287.18 | 298.01 | 10.82 | 2020 மற்றும் 2021 கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | கேள்வி வைப்புகள் | 18.44 | 18.55 | 0.10 | கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்பவர்களின் பட்டோலையினுள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | பெற வேண்டிய கடன் வட்டி (UDSP) | 395.63 | 394.79 | 0.84 | 2020 மற்றும் 2021 கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | கொடுக்கல் வாங்கல் வைப்புகள் | 4,737.23 | 4,737.26 | 0.02 | 2020 மற்றும் 2021 கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி | 2.67 | 2.61 | 0.06 | 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | மின்சாரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வைப்புகள் | 111.14 | 107.25 | 3.890 | 2021.12.31 ஆந் திகதியில் இறுதியில் உள்ளபடியாக கணக்குகளின் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஒ) | பெற வேண்டிய மாதாந்த வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வரித் தொகை | 96.66 | 96.06 | 0.59 | 2021.12.31 ஆந் திகதியில் இறுதியில் உள்ளபடியாக கணக்குகளின் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். |
| (ஓ) | மாதாந்த வாடகை மற்றும் பயன்பாட்டு கட்டணங்களின் அடிப்படையில் இதுவரையிலும் கிடைக்காத தண்டப்பணம் | 52.29 | 141.35 | 89.06 | 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.5.5 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனி** | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களாக ரூபா 10.28 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருப்பினும் இதன் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது 2011 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மட்டுமாகும். 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட சொத்துக்களின் உரித்து கம்பனிக்குரியதென மற்றும் விடுதிகள் உள்ளடங்கலாக ஏனைய சொத்துக்கள் காண்படுகின்றமையும் கம்பனியின் முகாமைத்துவம் ஏற்றுக்கொண்டிருப்பினும் அச் சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 10.28 மில்லியனான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு | கம்பனி நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன் 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடர்புடைய தகவல்கள் வழங்க முடியாதுள்ளது. | கம்பனிக்குரிய அனைத்துச் சொத்துக்களும் தொடர்பாக பரிசோதிக்கப்பட்டு அவ் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டு சொத்து தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு மற்றும் முழுமையாக பேணிச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் முழுமையாக பேணப்பட்டிருக்காத காரணத்தால் நிலையான சொத்துக்களின் சரியானதன்மையை கணக்காய்வில் சான்றுபடுத்த முடியாதிருந்தது. | | |
| (ii) | மீளாய்வாண்டில் மஹியங்கனை விடுதியில் மேற்கொள்ளப்பட்ட மீள்கட்டுமானத்திற்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 3.19 மில்லியன் மீளாய்வாண்டின் செலவினமாக மற்றும் செலுத்தப்பட வேண்டிய செலவினமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நாளேட்டு குறிப்பு ஊடாக கிரயம் மூலதனமாக்கப்படல் வேண்டும். 2019 ஆம் ஆண்டில் அப் பெறுமதி நடைமுறை வேலையின் கீழ் திருத்தப்பட்டு காண்பிப்போம். | மீளாய்வாண்டிற்குரிய செலவு மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | கம்பனி மற்றும் தாய் கம்பனியுடன் காணப்படும் நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 57.63 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கின் பிரகாரம் கம்பனிக்கு உரியதாக காணப்பட்ட நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 61.68 மில்லியனானமையால் கணக்குகளுக்கிடையே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 4.05 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறான போதிலும், அந்த கணக்குகளுக்கிடையே வேறுபாடுகள் இனங்காணப்பட்டு குறித்த மீதியிலிருந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி இணக்கக்கூற்று 2019 ஆம் ஆண்டின் போது கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிராத போதிலும், தெளிவான நிலைமையை புலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கணக்குகளை சமர்ப்பிக்க முன்னர் தாய்க் கம்பனியுடன் உள்ள நடைமுறைக் கணக்கின் மீதி கம்பனியின் அதன் தொடர்புடைய மீதிகளுடன் ஒப்பிட்டு வேறுபாடுகளை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியின் 2019 திசெம்பர் 31 இற்கு முன்வைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 60 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திரவத்தன்மை அடிப்படையில் முறையாக முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் அதன் பிரகாரம் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமைக் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முன்வைக்கப்படல் வேண்டும். |

.

| | | | |
|---|---|---|---|
| (v) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இன் 81 ஆம் பந்தியின் பிரகாரம், குத்தகை வாங்குபவரிடமிருந்து செயற்பாட்டு குத்தகைக்காக பெறப்படுகின்ற வருமானம் இலகு வழி அடிப்படை அல்லது ஏனைய முறையான அடிப்படையினைக் கொண்டு அடையாளப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயினும் 10 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 03 விடுதிகளுக்காக மீள செலுத்தாமை அடிப்படையில் 2019 யூலை 10 ஆம் திகதி அறவிடப்பட்டிருந்த ரூபா 2.78 மில்லியனான தொகை முறையான அடிப்படையொன்றில் குத்தகை காலத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டின் வருமானமாக அடையாளப்படுத்தியமையினால் மீளாய்வாண்டின் இலாபம் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது 10 ஆண்டுகளுக்கும் காலக்கழிவு மேற்கொள்ளப்பட வேண்டியமையினால் 2019 ஆம் ஆண்டிற்கு மட்டும் நாளேட்டில் உள்ளடக்கப்படல் திருத்தப்பட்டு காண்பிப்போம். | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் பிரகாரம் குத்தகை வருமானத்தினை அடையாளப்படுத்தல் வேண்டும். |
| (vi) | 2019 திசெம்பர் 31 இற்கு பெறப்பட வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 0.74 மில்லியன் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இலாபம் அப் பெறுமதியினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வங்கி உறுதிப்படுத்தலின் ஊடாக இது மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். | பெறப்பட வேண்டிய வருமானம் குறித்த வண்ணம் அடையாளப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (vii) | விடுதிகளிலிருந்து பெறப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 1.49 மில்லியனால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ஆண்டின் இலாபம் மற்றும் வியாபார கடன்பட்டோர் அப் பெறுமதியினால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன் பட்டோர் பேரேடு கம்பனியினால் பேணப்படவில்லை. எனினும் சரியான தகவலை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு நாங்கள் அதற்காக நடவடிக்கை எடுக்கின்றோம். | பெறப்பட வேண்டிய வருமானம் குறித்த வண்ணம் அடையாளப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | உள்ளூராட்சி நிறுவனத்திற்குரிய, கம்பனி ஊடாக கட்டுப்படுத்தப்படுகின்ற விடுதிகள் ஊடாக ஈடப்பட்டிருந்த வருமானத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மீண்டும் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3.66 மில்லியனான பெறுமதி சேர் வரி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கிலிருந்து முழமையாக கைவிடப்பட்டிருந்தமையினால் நாளேட்டு குறிப்பின் ஊடாக திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுப்போம். | பெறப்படுகின்ற வருமானங்களில் குறித்த பொறுப்பு குறைக்கப்பட்டு நிகர வருமானம் மட்டும் கம்பனியின் வருமானமாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும். |
| (ix) | இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் ஒழுங்குகளுக்கு முரணாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது முதிர்ச்சிக் காலம் ஒரு ஆண்டினை மிகைக்கும் ரூபா 39.49 மில்லியனான நிலையான வைப்புக்கள், காசு மற்றும் காசுக்கு சமனான உருப்படியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆதனம் மற்றும் பொறிகளின் கிரயத்திற்கு பதிலாக தேய்மானம் கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கல் காரணத்தினால் முதலீட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப் பாய்ச்சலில் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 0.63 மில்லியனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | முதலீட்டு செயற்பாட்டின் கீழ் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் மட்டும் குறிப்பிடப்பட வேண்டியமையினால் ஆண்டினுள் ஏற்படுகின்ற மாற்றங்கள் குறிப்பிடப்படல் வேண்டும். நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தல் முதலீட்டு செயற்பாட்டு கிரயத்தின் கீழ் குறிப்பிடப்படுதல் வேண்டும். தேய்மானத்தின் பின்னர் அது குறிப்பிடப்பட்டிருப்பின் காசு வெளிப்பாய்ச்சல் திருத்தப்படும். | குறித்த நியமத்திற்கு அமைவாக காசுப் பாய்ச்சல் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (x) | மீளாய்வாண்டினுள் அறவிடமுடியாக் கடனாக ரூபா 4.15 மில்லியன் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறவிடமுடியாக் கடனை கணிப்பிடுவதற்கு உரிய பட்டோலை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணிப்பிடுவதற்காக பதிவேடொன்று வழங்கப்பட்டிராத போதிலும், அது 2019 ஆம் ஆண்டுக்காக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | உரிய விபரங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (xi) | மீளாய்வாண்டுக்குரிய வருமான வரி கணக்கிடல் தொடர்பான தகவல்கள் மற்றும் அட்டவனை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய விபரங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (xii) | வியாபார கடன் பட்டோர் ரூபா 21.12 மில்லியன் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கடன் கொடுத்தோர் மீதிகளின் சான்றுபடுத்தல் கடிதங்களை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 7.15 மில்லியனான மீதிக்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கிடைத்திருக்காததுடன், இந்த கடன் பட்டோர் மீதிகளின் நிலவுகையை கணக்காய்வுக்கு உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | | பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| **(ஆ)** | **வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி** | | |
| (i) | இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 16 இன் பிரகாரம் முற்றாகத் தேய்மானம் ஆகியபோதும் தற்போதும் பாவனையில் உள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அவற்றின் பயன்படுகாலம் மீண்டும் பெறுமதியிடப்பட்டு LKAS 08 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்டபோதும் தொடர்ந்து பயன்படுத்தப்படும் ரூபா 105.8 மில்லியன் பெறுமதியான சொத்துக்களின் விடயத்தில் அவ்வாறு நடைபெறவில்லை. | முற்றாகத் தேய்மானமாகி பயன்படுத்தப்பட்டவாறுள்ள சொத்துக்கள் கட்டாயமாக மீளப் பெறுமதியிடப்பட வேண்டுமென்பது அவசியம் அற்றது என்பது எமது நம்பிக்கையாகும். நிறுவனத்தின் சகல சொத்துக்கள் இனம்காணப்படுவதும் பெறுமதியிடப்படுதலும் ஏற்கனவே (2021 ஆம் ஆண்டில்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் இக் கணக்கில் குறிப்பிட்டவை பூர்த்தி செய்யப்படுகின்றன எனக் கூறுவதற்கு முடியும். | நியமப்படி முற்றாகத் தேய்மானமாகி தற்போது பயன்படுத்தப்படும் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் போதும் கம்பனியானது முன்னைய ஆண்டினதும் 23 ஏக்கர், 01 றூட், 9.05 பர்ச்சஸ் காணி 99 ஆண்டுக்குத்தகையின் அடிப்படையில் ரூபா 4,275.04 மில்லியனான தொகைக்கு மற்றுமொரு 01 ஏக்கர் 03 றூட், 34.02 பர்ச்சஸ் காணி 20 ஆண்டுகாலத்திற்கு ரூபா 80 மில்லியனிற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நியம இலக்கம் 16 இன் 24 மற்றும் 26 பந்திகளின் பிரகாரம் குத்தகைப்படி காணியைப் பயன்படுத்தும் உரித்து மற்றும் அதற்குரிய வாடகை கொடுப்பனவு பொறுப்பு என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | கம்பனியானது மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் 99 ஆண்டுக் குத்கை மற்றும் 20 ஆண்டுக் குத்தகை அடிப்படையில் காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றிருந்தது. இக் கம்பனியானது குறித்த நடவடிக்கைகளை இலங்கை நிதி அறிக்கையிடலின் 16 ஆம் இலக்கப் படியான கிரயக் கோட்பாட்டிற்கமைய கணக்கிலிட்டுள்ளது. இச் சொத்து தொடர்பான நேரடிச் செலவுகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப கணக்குகளைச் சமர்ப்பிக்கையில் நியமங்களுக்கேற்ப செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வரிசை அமைச்சுடன் ரூபா 0.64 மில்லியனான பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்டமையானது 24 ஆம் இலக்க கணக்கீட்டு நியமங்களின்படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமப்படி வெளிக்கொணர நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கமைய கம்பனியானது வாகனத்தரிப்பிடம் மற்றும் வீதிகள் தொடர்பான மதிப்பிடப்பட்ட பயன்தரு பாவனைக்காலத்தை 05 முதல் 25 ஆண்டுகள் வரை மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் மாற்றம் செய்திருந்தபோதும், அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றத்தின் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கம் மீளாய்வாண்டில் வெளிப்படுத்தப்பட வேண்டியபோதும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்காய்வு ஐய வினாவின் பிரகாரம் 08 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதானது 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு மதிப்பீடுகளின் தாக்கம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். கணக்கீட்டுக் கொள்கைக்கான மாற்றத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (v) | கம்பனியானது ரூபா 14.7 மில்லியன் செலவில் ஓக்கிட் தாவரங்களை 2019 இல் கொள்வனவு செய்து வணிகமய நோக்குடன் கம்பனிவளாகத்தில் நட்டிருந்தது. எவ்வாறாயினும், 41 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமப்படி இந்த ஜீவ விஞ்ஞான சொத்தானது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | ஓக்கிட் செயற்திட்ட ஆரம்பத்தில் உற்பத்தியாகும் தாவரத்தை விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டது. எனினும் இது அமுலாகவில்லை. இது அலங்காரத் தாவரமாக பயன்படுத்தப்பட்டதால் ஜீவ விஞ்ஞான சொத்தாக காட்டப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டப்படி வணிகமய நோக்கு இருப்பதால் LKAS - 41 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (vi) | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 125.44 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட புகையிரத சிற்றுண்டிச்சாலையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி தொடக்கம் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் பொருட்டு மீளாய்வாண்டின் | இப் புகையிரத சிற்றுண்டிச்சாலை 2018 ஆம் ஆண்டில் கேள்வி கோரப்பட்டு வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகும். எனினும் 2019 இறுதி வரை இந்த ஒப்படைப்பு சம்பந்தமாக குறிப்பிட்ட தரப்பினருடன் கொடுப்பனவுக்கான உடன்படிக்கை | சொத்துக்கள் பயன்படுத்தப்படும் காலம் தொடக்கம் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். ஆகவே, கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியை சேர்ந்து நின்ற அடிப்படையில் கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | இறுதிவரை கொடுப்பனவுத் தாமதத்திற்கான வட்டியுடன் ரூபா 130.88 மில்லியன் கம்பனியால் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனி மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் இதற்கான பொறுப்பை 13(ஆ) குறிப்பின் கீழ் மாத்திரம் கூட்டியிருந்தது. இதற்கமைய, மீளாய்வாண்டினது இலாபம் மற்றும் மீளாய்வாணடின் இறுதியில் உள்ளவாறான நிறுத்தி வைத்த இலாபம் என்பன முறையே ரூபா 26.42 மில்லியன் மற்றும் ரூபா 22.02 மில்லியன் எனக் கூடுதலாகவும் வர்த்தக மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 136.88 மில்லியன் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, இந்த ஒப்படைப்பு சம்பந்தமாக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்ள வேண்டிய கொடுப்னவு தொடர்பாக முறையான யோசனையும் சட்டபூர்வக் கடப்பாடும் இல்லாது இருந்தமையால் வெளிப்படுத்தல் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், தற்சமயம் இச்சிற்றுண்டிச்சாலை சம்பந்தமாக சட்டபூர்வ உடன்படிக்கையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கொடுப்பனவு தொடர்பான சலுகை கலந்துரையாடப்பட்டு முறையான உடன்படிக்கையின் பின்னர் இப் பொறுப்பை கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காட்ட வேண்டும். |
| (vii) | ஏசியா பசிபிக் கோல் கோஸ் கம்பனியை 2009 ஆம் ஆண்டில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் சுவீகரித்தபோது அங்கிருந்த ரூபா 262.28 மில்லியனான பெறுமதியான அலுவலக உபகரணங்கள் சமையலறை உபகரணங்கள் உள்ளடங்கிய ஏனைய நடைமுறைச் சொத்துக்களும் சுவீகரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், வோட்டர்ஸ் எஜ் கம்பனி அவ்வாறாகச் சுவீகரித்த சொத்துக்களான பொருட் பதிவேட்டிலிட மற்றும் பெறுமதியிட்டுக் கணக்கிலிட நடவடிக்கை எடுக்கவில்லை. | நிறுவனத்தைச் சுவீகரிக்கையில் இருந்த சொத்துக்கள் சம்பந்தமாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கவில்லை. அதன் பொருட்டு இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் அறிவுறுத்தலின்படி சுவீகரித்த சொத்துக்கள் சட்டவரையறைக்கு உட்படமாட்டா எனக் குறிப்பிடப்பட்டு அவை கணக்கிலிடப்படவில்லை. ஆனால் தற்சமயம் பொருட்களை மீள மதிப்பிடுகையில் சகல சொத்துக்களும் எதிர்காலத்தில் கணக்கிலிடப்படும். | சொத்துக்களின் மூல உரித்தாளர்களது சொத்துக்கள் யாவும் பதிவு செய்யப்பட வேண்டும். அவை மீள மதிப்பீடு செய்யப்பட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (viii) | 06 மாதத்திற்குள் அலுவலக சிறுவர் பூங்கா ஒன்றை அமைப்பதன் பொருட்டு 2017 | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. | உடன்படிக்கைப் பிரகாரம் பெற வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | டிசெமப்ர் 21 ஆந் திகதியன்று வெளிநாட்டு தனியார் கம்பனி ஒன்றுடன் அபிவிருத்தி உடன்படிக்கையை கம்பனி செய்திருந்தது. அபிவிருத்தி உடன்படிக்கையின் 4.1 இன் பிரகாரமும் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரமும் முகாமைத்துவக்காலத்தின் போது அபிவிருத்தியாளரால் மாதாந்தம் ரூபா 0.6 மில்லியன் வாடகையாக கம்பனிக்குச் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரை பணம் செலுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அபிவிருத்தியாளரால் கம்பனிக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 108.8 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவுமில்லை. | | தொகையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ix) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 04 அரச நிறுவனங்களிலிருந்து கம்பனி ரூபா 16.86 மில்லினான பெறவேண்டிய 02 முதல் 06 ஆண்டு வரை பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்தது. எவ்வாறாயினும், குறித்த நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களில் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டியதாக இது காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினா மூலம் தெரிவிக்கப்பட்ட இவ்விடயத்தை கம்பனி தற்சமயம் இனம்கண்டுள்ளது. உள்ளகக் கணக்கீட்டு முறைமையை ஸ்தாபித்த நிறுவனத்திலும் இது தொடர்பாக விசாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தேவையான எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டியவற்றை அவற்றிற்கு அறிவித்து நிதிக்கூற்றுக்களில் உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) நகர முதலீட்டு அபிவிருத்திக் கம்பனி**

| | | | |
|---|---|---|---|
| (i) | கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலைகள் மற்றும் கடன் பட்டோர் பேரேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிகளுக்கிடையே ரூபா 7.22 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும், அதன் வேறுபாட்டினை வெளிப்படுத்துவதற்காக | காலப் பகுப்பாய்வின் பிரகாரம் இது கட்டமைப்பிலான வழுவின் காரணமாகவாகவே இடம்பெற்றுள்ளது. சயன்ஸ் லேன்ட் கம்பனியின் கட்டமைப்பு பகுப்பாய்வாளர்களால் வயதுப் பகுப்பாய்வு அறிக்கையில் இந்த மீதியினை திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், | கட்டமைப்பு வழுக்கள் திருத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எந்தவொரு ஒப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் அவற்றை திருத்தி நிறைவு செய்யப்படும். | |

**1.5.6 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| | விடயம் | தொகை ரூபா மில். | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்<br>- நடைமுறை வேலை<br>- அரச மானியங்கள்<br>- நடைமுறை கணக்குகள் இணக்க அறிக்கை | 9,112.17 | விரிவான பட்டோலைகள் | முதலீட்டு ஆதனங்கள் மற்றும் ஏனைய பட்டோலைகள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய விபரங்களுடனான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முதலீட்டுச் சொத்துக்கள் | 96,706.77 | - ஆதனங்களை சுவீகரிக்கும் திகதிகள்<br>- மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி<br>- பதிவழித்தல்<br>- குத்தகை வழங்கப்பட்ட அடிப்படை | இந்த விபரம் 2020 ஆம் ஆண்டிற்குரிய புதிய மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் மற்றும் காணிகளுடன் இனங்காணப்பட்டு இணக்கப்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. 2020 புதிய மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்படும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | உரிய விபரங்களுடனான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | செத்சிரிபாய கட்டிடத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் மாற்றப்பட்ட பகுதிகள் தொடர்பான விபரங்கள். | 1,613.13 | மாற்றப்பட்ட பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த தேவையான தகவல்கள். | 2019 ஆம் ஆண்டில் அதிகார சபையின் மேற்படி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய ரூபா.1,613.13 கிரயமான பெறுமதி பாராளுமன்ற செயற்திட்ட இலக்கமான 1210400 இல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் | அதனை சான்றுபடுத்த போதிய தகவல்கள் பேரேட்டு பதிவுகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உபகரணங்களுக்கு உரிய கணக்கு இலக்கம் 2118 இன் கீழ் J 22548 ஆம் இலக்க பேரேட்டு பதிவில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பாராளுமன்ற காணிகள் | 114.82 | குத்தகை உடன்படிக்கைகள் | பெரும்பாலான காணிகளுக்காக அரசின் கட்டளை சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் கொடுப்பனவு பத்திரம் இதுவரையிலும் அதிகாரசபைக்கு கிடைக்கவில்லை என்பதால் குத்தகை உடன்படிக்கையினை வழங்கும் இயலுமையொன்று இல்லாதிருந்ததுடன் காணிகளின் பௌதீக உரித்து கையளிக்கப்பட்ட திகதியில் குத்தகை உடன்படிக்கையின் ஆரம்ப திகதியாக கருதப்படும். அதற்கமைய குறித்த காணிகளின் குத்தகை உடன்படிக்கை காலம் இதுவரையிலும் நிறைவடையவில்லை. | அதிகாரசபைக்கு குத்தகை உரித்தினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வெளிவாரி தரப்பினர்களுக்கு காணிகளை குத்தகைக்கு வழங்குவதால் சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்பது |
| (உ) | குத்தகை பிற்போடப்பட்ட வாடகை (பொறுப்புக்கள் கணக்கு) | 129.85 | - குத்தகை ஆதனங்கள்<br>- அமைந்துள்ள இடங்கள் | இது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் ஊடாக குத்தகை தொடர்பில் பரீட்சித்து உரிய திருத்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை ஆதனங்கள் தொடர்பில் சரியான தகவல்களை பேண வேண்டும். |
| (ஊ) | பெற வேண்டிய மதியுரை மற்றும் முகாமைத்துவக் கட்டணங்கள் | 10.63 | விரிவான பட்டோலைகள் | குறித்த பட்டோலையை நாளதுவரையாக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றமையால் அதன்போது இனங்காணப்படும் மீதிகளில் கணக்குகளில் சீராக்குவதற்கு | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு விரிவான பட்டோலைகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ) | சொத்துக்களை மதிப்பீடு செய்யும் கட்டணங்கள் | 2.25 | மதிப்பீட்டாளரை தெரிவு செய்வதற்குரிய ஆவணங்கள் | நடவடிக்கை எடுக்கப்படு பணிப்பாளர் நாயகத்தின் 2021.02.18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் ஒருவராக இருந்து இதற்கு முன்னர் அதிகாரசபையின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் போது சுழற்சியான பங்களிப்பொன்றினை வழங்கி நடவடிக்கை எடுத்த பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரான ஜீ.டபள்யூ.பீ.அபேகுவர்த்தன அவர்கள் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அப்பணி சாட்டப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. சுயாதீனமான அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நபர் ஒருவரினால் சொத்துக்களின் மதிப்பீடானது சுயாதீனமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலைக்கப்படுவதன் கீழுள்ள பேலிய கொட வெயா ஹவ்ஸஸ் கம்பனிக்கு சொந்தமான பண்டகசாலை தொகுதியை மாதாந்த வாடகை அடிப்படையில் அதிகார சபையினால் நெழும் பொக்குன நாடக அரங்கிற்கு 2017 ஆகஸ்ட் மாதம் முதல் வழங்கியிருந்த போதும் இது தொடர்பாக இரு தரப்பினரிற்கு இடையில் உடன்படிக்கை ஒன்று கணக்காய்வு திகதி வரையும் கைச்சாத்திடப்பட்டு இருக்காததுடன் அதன் பிரகாரம் வாடகை தொகையையும் செலுத்தியிருக்கவில்லை. இதன் காரணமாக நாடக அரங்கிலிருந்து 2019 திசெம்பர் 31 திகதியன்று அதிகார சபைக்கு கிடைக்க வேண்யடி இருந்த மொத்த | கலாச்சார விவகார அமைச்சு மற்றும் சனாதிபதி செயலகத்துடன் 2015 ஆண்டு வரை வாடகை உடன்படிக்கைக்கு உட்பட்டுள்ளது. 2015 ஆண்டு அரசியல் சூழலின் மாற்றத்துடன் அவற்றிற்குரிய உடன்படிக்கைகளுக்கு உட்பட முடியாத போதும் அவர்களால் தொடர்ந்தும் பண்டசாலையை கட்டிடம் பயன்படுத்தியிருந்தது. அவ்வாறே அவ்வாண்டில் அதற்குரிய வாடகையையும் அவர்களால் செலுத்தவில்லை. அதிகார சபை பல சந்தர்ப்பங்களில் நிலுவை அறவிட கடிதம் அனுப்பிய போதும் இது வரை அந்த பணத்தை செலுத்த | 2015 இன் பின்னர் அதிகார சபையின் சொத்துக்கள் உடன்படிக்கை இன்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கைக்கு உட்பட மற்றும் நிலுவை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை வாடகை தொகை ரூபா 8.03 மில்லியனாக இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| (ஆ) | சமர்பித்துள்ள கடன்படுனர் வயது பகுப்பாய்வின் பிரகாரம் கூட்டுத் தொகை ரூபா 1,153.1 மில்லியன் பெறுமதியான 7 பேரேட்டு கணக்கு மீதிகளிற்கிடையில் ரூபா 477.5 மில்லியன் ஆண்டு 3 – 4 வரையான காலமாக நிலுவையாக காணப்படுவதாக அவதானிக்கப்பட்டன. அது மொத்த பெறுமதியில் 30.69 சதவீத விகிதமாகும் என மேலும் அவதானிக்கப்பட்டது. | நிலுவை மீதியை அறவிட தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. செலுத்துவதற்கு இயலாத வாடிக்கையாளர்களிற்காக சட்ட நடவடிக்கை மூலம் அறவிட எதிர்பார்க்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிட ஒழுங்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டும் |
| (இ) | 2011 ஆண்டில் லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியை நிறுவும் சந்தர்ப்பத்தில் அக் கம்பனிக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைக்கும் போது இக் கிடைக்க வேண்டிய மீதியை இனங்கண்டு உரிய முறையில் ஒப்படைத்திருக்காத காரணத்தால் 2019 நிதிக்கூற்றுக்களில் ரெஸ்ட் ஹவுஸ் கடன்படுனர் மீதியாக ரூபா 1,168.48 மில்லியனான வரவு மீதிகளிற்கு ரூபா 1,053.79 மில்லியனான செலவு மீதிகளை பதிலிட்டு ரூபா 114.65 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வரவு குறிப்பின் மூலம் விலைப் பட்டியல்களை கணக்கீடு செய்தல் மற்றம் பிழைகளை சரிசெய்தலும் செலவு குறிப்பின் மூலம் பணம் கிடைப்பதும் பிழைகளை சரிசெய்தலுமாகும். அதன் பிரகாரம் அவ் வரவு மற்றும் செலவு மீதிகள் சமபடுத்தலின் கிடைத்திருந்த பெறுமானம் சரியாக கணக்ககளில் காட்டப்பட்டுள்ளது. தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் பரிந்துரை மீது அதற்கான செம்மையாக்கல் எதிர்காத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்களை ஒப்படைக்கும் போது சரியாக கணக்குகளிற்கு செமமையாக்க வேண்டும். |
| (ஈ) | கிடைக்க வேண்டிய முகாமைத்துவ மதியுரை கட்டணமான ரூபா 39.25 மில்லியன் மீதிக்கு ரூபா 28.62 மில்லியன் செலுத்த வேண்டிய மீதிகளை பதிலிட்டு ரூபா 10.63 மில்லியன் மீதியொன்று கிடைக்க வேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. அம் மீதியினை 35 ஆண்டுகளை விட பழமையான ரூபா 19.58 மில்லியன் இனங்காணப்படாத கிடைக்க வேண்டிய மீதியொன்றும் ரூபா 18.87 மில்லியன் இனங்காணப்படாத செலுத்த வேண்டிய மீதியொன்றும் உள்ளடங்ப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத மற்றும் நாணாவிதமாக குறிப்பீடப்பட்டுள்ள கிடைக்க வேண்டிய மறை மீதியுனுள் 1983 மற்றும் 1984 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட 35 ஆண்டுகளை விட பழமையான கொடுக்கல் வாங்கலின் பெறும்பாலான மீதிகள் உள்ளடங்கப்பட்டுள்ளன. அம் மீதிகளிற்கான மூல ஆவணங்களை கண்டறிய முடியவில்லை. பதிவழிக்க வேண்டிய மீதிகள் 2022.06.30 திகதிக்கு முன்னர் முகாமைத்துவ சபை | உரிய காலத்தினுள் கண்குகள் சரி செய்யப்பட வேண்டியதுடன் கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் பதிவழிக்க எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகார சட்டத்தின் II ஆம் பிரிவின் 8 ஆம் பந்தியினது (ஐ) பிரிவு | அதிகாரி சபையினால் நகர காணிப் பயன்பாட்டுக் கொள்கையை தயாரித்து அமுல்படுத்த வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | 1978 முதல் 2022.05.04 வரை வெளியிடப்பட்ட 94 உள்ளூராட்சி நிறுவனங்களில் 64 அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.<br><br>இன்னும் 57 அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. | சட்டத்தின் பிரகாரம் பொது காணி பயன்பாட்டுக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமென. |
| (ஆ) | 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 11 அ பகுதியின் 8(அ) பிரிவு | பல்வேறு தேவைபாடுகளிற்காக வாகனங்களில் வருகை தரும் பொது மக்களது வாகனங்களைத் நிறுத்தி வைக்கும் நிலையமொன்றை உருவாக்குதலும் அவ்வப்போது அதன் வசதிகளை அதிகரிப்பதற்குமான தேவை அதிகார சபையின் தலையீட்டில் நடைபெற வேண்டுமெனினும் அதிகார சபை அது தொடர்பாக போதிய கவனம் செலுத்தாதமை அவதானிக்கப்பட்டது. தலைநகரத்தினுள் 15 வாகன தரிப்படங்கள் நிர்மானிக்க கிடைத்திருந்த 15 செயற்திட்டங்களின் 05 யினை உடன்படிக்கை பிரகாரம் அமுழ்படுத்தாதனால் கொழும்பிலும் நெரிசல் மிக்க நகரங்களிலும் வீதிப்போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வு வழங்கப்படாதமை அவதானிக்கப்பட்டன. | பின்வரும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>➢ பல மாடி வாகன தரிப்பிடங்கள் நிர்மாணித்தல்<br>➢ இலகு புகையிரத பாதை செயற்திட்டம்.<br>➢ கடுகதி பாதைகள் மூலம் பிரதான நகரங்களுக்கு பரிமாற்று நிலையங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளமை<br>➢ தெற்கு புகையிரத பாதை மற்றும் களனி வெலி புகையிரத பாதை<br>அதற்கு மேலதிகமாக பிரதான நகரங்களில் வாகன நெரிசலை குறைப்பதற்கான தீர்வுகளை செயற்படுத்தியுள்ளது. | சட்டத்தின் தேவைபாடு பிரகாரம் செயற்பட வேண்டும். |

(இ) திறைசேரி சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | சுற்றறிக்கை பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமான உடமையிலுள்ள, பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாக பொது 287 படிவம் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச்செல்ல வேண்டிய போதும் அவ்வாறான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் தவிர ஏனைய அனைத்து நிலையான சொத்துக்களிற்கும் சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றது. 2022 ஆண்டில் நிதிக்கூற்றுக்களிற்கு மீள்மதிப்பீட்டு பெறுமானங்களை செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மதிப்பீட்டு அறிக்கையினால் முன்வைக்கப்படாத தகவல்கள், ஆதன அபிவருத்தி பிரிவின் மூலம் கணனிமயமாக்கப்படுகின்றன. | சுற்றறிக்கை பிரகாரம் சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2011 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | கணனி இயந்திரங்கள் கொள்வனவு செய்தல், பொறுப்பு, பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் பராதீனம் செய்தல் போன்ற விவரங்கள் உள்ளடங்கியவாறு கணனி இயந்திரங்கள் தொடர்பாக மற்றும் கணனி மென்பொருல் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்ல வேண்டிய போதும் அவ்வாறான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அதிகாரி சபைக்கு சொந்தமான கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி மென் பொருல் பற்றிய விரிவான அறிக்கையொன்று நிதி முகாமைத்தவ தகவல் தொகுதி ஊடாக பேணிச் செல்லகப்படுகின்றது. எதிர்காலத்தில் தொகுதியை அபிவிருத்தி செய்தல் குறித்த கமிபனியின் மூலம் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் கணனி பற்றிய தகவல்கள் உள்ளடங்கிய பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை | | | |
| (i) | 8.2.3 ஆம் பிரிவு | துணைக் கம்பனியாக அதிகார சபையினால் 2014 நவம்பர் 21 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நகர முதலீட்டு மற்றும் ஆதன விற்பனை தனியார் கம்பனி, நகர முதலீட்டு மற்றும் ஹோடல் அபிவிருத்தி கம்பனி, ஓர்ச்சாட் (Orchard) நகர வீடுகள் | அதிகார சபையின் அபிவிருத்தி நோக்கங்களிக்கு இணங்க முகாமைத்துவ சபையின் தீர்மானங்களுக்கு இணங்கி ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பின்னர் அரசியல் அமைப்பின் ஏற்பட்ட மாற்றத்தின் மீது அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவில்லை. இந்த | சுற்றறிக்கை பிரகாரம் கம்பனிகளை ஸ்தாபிக்கும் போது அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அபிவிருத்தி கம்பனி மற்றும் வோடஸ்எட்ஜ் ஹோடல் அபிவிருத்தி கம்பனி ஸ்தாபிக்கப்படுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கம்பனிகளின் செயற்பாடுகள் தொடர்பாக முகாமைத்துவ சபையுடன் கலந்துரையாடி இறுதி தீர்மானமொன்றை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ii) | 10.2.4 (அ)(ஆ) | பேலியகொடை வெயா ஹவுஸ் கம்பனியை கலைக்கும் நடவடிக்கைகளின் செயலாற்றுகையை குறித்த அமைச்சினால் மேற்பார்வை செய்ய வேண்டியதுடன் திறைசேரி பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு காலாண்டு ரீதியாக அதன் செயலாற்றுகை தொடர்பாக அறிக்கையிட வேண்டும். அவ்வாறே கலைப்பதற்கு எடுக்கும் காலம் 06 மாதகால உச்சமாக வேண்டியதுடன் அக் கால எல்லையினுள் கலைக்க நடவடிக்கை எடுக்க முடியாத போது கலைக்கும் காலத்தை நீடித்துக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் கம்பனி இத் தேவைப்பாட்டிற்கு இணங்கி இருக்காமை அவதானிக்கப்பட்டது. | கலைத்தல் தாமதமானது துறைமுகங்கள் அதிகார சபையினால் காணியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காமை மற்றும் உத்தேச கொழும்பு துறைமுக மேன்பாட்டு அபிவிருத்தி நிகழ்ச் திட்டத்தை செயற்படுத்தாமை காரணமாகும். அவ்வாறே பண்டகசாலை கட்டிடத் தொகுதியில் சேவை வசதிகளை பெற்றிருந்த நிறுவனம் ஒதுங்குவதற்கு போதிய காலஎல்லை ஒன்றை கடத்திய காரணத்தினாலாகும். | கம்பனி ஒன்றை கலைக்கும் போது குறித்த சட்ட விதிகளிற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு அதிவிசேட வர்த்தமானியின் V ஆம் அட்டவணையின் 7 ஆம் பந்தி | பல ஆண்டுகளுக்கு முன்பு அதிகாரசபை கொழும்பு மாநகர எல்லையினுள் மற்றும் வாவிகளை அண்மித்த இடங்களிலும் மேற்கொண்ட கணிப்பீட்டு நடவடிக்கை பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணம் மற்றும் அனுமதியற்ற மாற்றங்கள் 1,868 இனை இனங்கண்டிருந்தன. அதனுடன் தொடர்பான வர்த்தமானியின் ஏற்பாடுகள் பிரகாரம் அவற்றை | கணிப்பீட்டினால் இனங்கண்ட அனுமதியற்ற 68,000 வீடுகளை 2021.12.31 திகதியளவில் 9958 குடும்பங்கள் மாடி வீடுகளிற்கு குடியேற்றி அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் அனுமதியற்ற மாற்றங்கள் தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சரிற்கு வழங்கியுள்ள | வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சட்டபூர்வமாக்க முடியுமாயின் பிற்போட்ட அங்கீகாரக கட்டணம் அல்லது பாவனை மாற்றக் கட்டணத்தை அறவிட்டு அவற்றை சட்டபூர்வமானதாக்க அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க ஆலோசனைக் குழுவொன்று வர்த்தமானி மூலம் விரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் குழுவினால் 2019 ஆண்டின் போது 35 நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. 2020 முதல் குழு செயற்படவில்லை. | |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 113(3) | கடந்த ஆண்டுகளிற்குரிய ரூபா 32.06 மில்லியன் பெறுமதியான கடன்படுனர் மீதிகளை 4 ஜர்னல் குறிப்புக்கள் மூலம் நிதி அமைச்சின் அங்கீகாரமின்றி பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அம் மீதிகளிலிடையில் ரூபா 17.87 மில்லியன் ஆன மீதிகளுக்கு பணிப்பானர் சபை அங்கீகாரத்தை ஏனும் பெற்றிருக்கவில்லை. | இந்த பதிவழித்தல்களை மீண்டும் கணக்குகளில் உள்ளடக்க தற்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் பலமாக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்களின் தேவைபாட்டிற்கு இணங்கி உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகார சபையினால் ஆரம்பித்திருந்த 07 வங்கிக் கணக்குகள் 2017 ஆண்டு முதல் செயலற்று காணப்பட்டன. அவற்றில் ஒரு கணக்கின் பேரேட்டின் பிரகாரம் ரூபா 0.4 மில்லியனான செலவு மீதியொன்று காட்டப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அச் செலவு மீதி ரூபா 1.04 மில்லியனாக இருந்தது. அதனால் அவ் வங்கி மீதிக்குரியதாக பேரேடு மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கிடையில் ரூபா 0.64 மில்லியனான வித்தியாசம் அவதானிக்கப்பட்ட போதும் அவ் வித்தியாசத்தை வெளிப்படுத்திக் கொள்ள எவ்வித இணக்கமும் செய்திருக்கவில்லை. | வங்கிக் கணக்கு கடந்த ஐந்து ஆண்டுகளினுள் செயற்படுத்தப்பட்டு இருக்காததுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையினால் தேவையான அங்கீகாரத்தை பெற்ற பின்னர் குறித்த வங்கிக் கணக்கை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிக் கணக்கு மற்றும் வங்கி இணக்கக் கூற்று தொடர்பாக உரிய மேற்பார்வை மற்றும் கவனத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் முறையான நிதக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 49.33 மில்லியன் பெறுமதியான 6 மாதங்களிற்கும் 24 மாதங்களிற்கும் அதிக காலப் பகுதியிலிருந்து நிலவிவரும் 1528 காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 திகதி வரையும் மாற்றப்பட்டிருக்கவில்லை. | நிகழ்நிலை முறையில் கீழ் திட்டம் அங்கீகாரம் பெறல் குறித்த விண்ணப்பதாரரினால் நேரடியாக வங்கிக்கு பணம் வைப்புச் செய்வதால் மற்றும் உரிய வைப்புக்களை கணக்கீடு செய்ய தொடர்புடைய விபரங்கள் அதிகார சபைக்கு கிடைக்க சில கால எல்லையொன்று செல்வதால் மாற்றப்படாத வைப்புக்களாக வங்கி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தன. 2020 ஆண்டில் அவ்வாறு நிலவிய அப் பெறுமதிகளை கணக்குகளில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிகழ்நிலை முறையை இனங்காண குறியீட்டு முறையொன்று போன்ற முறைமைகளை பயன்படுத்த வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் குழுமத்தின் மற்றும் அதிகாரசபையின் செயற்பாட்டுப் பெறுபேறு முறையே ரூபா 1,501 மில்லியன் மற்றும் ரூபா 1,086 மில்லியனான இலாபமாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் குழுமத்தின் மற்றும் அதிகாரசபையின் இலாபம் முறையே ரூபா 1,318 மில்லியன் மற்றும் ரூபா 769 மில்லியன் ஆகும். அதன் பிராகரம் குழுமத்தினதும் மற்றும் அதிகாரசபையினதும் முறையே நிதிப்பெறுபேறுகளில் முறையே ரூபா 183 மில்லியன் மற்றும் ரூபா 317 மில்லியனான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அதிகாரசபையின் ஏனைய வருமானம் ரூபா 424 மில்லியனால் அதிகரித்தமையும், ஏனைய செலவினங்கள் ரூபா 75.4 மில்லியனால் மற்றும் நிதிக் கிரயம் ரூபா 27 மில்லியனால் குறைவடைந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

| **உருப்படி** | **2019 ரூபா மில்லியன்** | **2018 ரூபா மில்லியன்** | **வேறுபாடு ரூபா மில்லியன்** | **சதவீதம் %** |
|---|---|---|---|---|
| வருமானம் | 2,581.6 | 2,711.29 | (129.69) | (4.78) |
| ஏனைய வருமானம் | 536.48 | 112.47 | 424.01 | 376.99 |
| நிர்வாகச் செலவினம் | 3,736.05 | 3,654.28 | 81.77 | 2.24 |
| சம்பளங்கள் | 1,680.68 | 1,436.37 | 244.31 | 17.01 |
| போக்குவரத்துச் செலவினம் | 33.47 | 15.43 | 18.04 | 116.91 |
| சுகாதார மற்றும் சுத்திகரிப்பு | 129.57 | 108.27 | 21.29 | 19.67 |
| வாடகை | 88.51 | 67.59 | 20.91 | 30.93 |
| ஏனைய செலவினங்கள் | 106.89 | 182.37 | (75.48) | (41.39) |
| செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | 49.06 | 128.4 | (79.34) | (61.79) |
| நிதிச் செலவினம் | 0.87 | 28.54 | (27.66) | (96.92) |
| உள்நாட்டு வங்கி கடன் வட்டி | - | 13.2 | (13.20) | (100) |

| | | | | |
|---|---|---|---|---|
| வரி | (0.007) | 14.39 | (14.40) | (100.05) |

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகாரசபையின் வருமானம் 4.78 சதவீதத்தால் குறைந்திருந்ததுடன் இதற்கு பிரதானமாக வாடகை வருமானம் 10.19 சதவீதத்தால் குறைந்தமை காரணமாக இருந்தது. மேலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய வருமானம் 377 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டினுள் ரூபா 460 மில்லியனான நடுத்தர வர்க்க வீடுகள் விற்பனை இலாபமொன்று ஏற்பட்டிருந்தமை இதற்காக முக்கிய காரணங்களாக இருந்தன.

(ஆ) நிர்வாகச் செலவினம் 2.24 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் சம்பளம் மற்றும் படிகள் 17 சதவீதத்தால் அதிகரித்தமையும் பிரயாணப் படிகள் 117 சதவீதத்தாலும், சுகாதார மற்றும் சுத்திகரிப்பு செலவுகள் 20 சதவீதத்தாலும் வாடகை கட்டணம் 31 சதவீதத்தாலும் அதிகரித்தமை இதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

(இ) கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ஏனைய செலவினங்கள் 41 சதவீதத்தால் குறைந்திருந்ததுடன், அதற்காக செயற்திட்ட செயற்பாட்டு செலவினம் 62 சதவீதத்தால் குறைந்தமை முக்கிய காரணங்களாக இருந்தன.

(ஈ) நிதிச் செலவினம் 96.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டினுள் உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்றுக் கொண்ட கடன்களிற்காக செலுத்திய வட்டி மற்றும் வாடகைக் கொள்வனவினை இரத்துச் செய்ததன் மீதான வட்டி நூறு சதவீதத்தால் குறைந்தமை முக்கிய காரணமாக இருந்தன.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதம் | 2019 | 2018 | வேறுபாடு |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.04 | 0.93 | 0.11 |
| தேறிய இலாப விகிதம் | 2.08 | 28.37 | 13.71 |
| தேர்வு விகிதம் | 1.60 | 1.50 | 0.10 |

(அ) நிறுவனமொன்றில் காணப்பட வேண்டிய நடைமுறை சொத்து விகிதம் 2 : 1 ஆன போதும் மீளாய்வாண்டில் அதிகார சபையின் நடைமுறை சொத்து விகிதம் 1.04 : 1 ஆனதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.11 ஆன அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) கடந்த ஆண்டில் 28.4 சதவீதமான தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டில் 42.08 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(இ) அதிகார சபையின் தேர்வு விகிதம் மீளாய்வாண்டில் 1 – 6 ஆனதுடன் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக அது 0.1 இனால் அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டினுள் நகர்புற புனர்ஜீவ செயற் திட்டத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கிய கடன் தொகை 57.8 சதவீதத்தால் மற்றும் பிற்போடப்பட்ட வாடகை கொள்வனவு பொறுப்பு 12.25 சதவீதத்தால் அதிகரித்தமை இதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹம்பந்தொட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாகம் ருகுனுபுற சர்வதேச கேட்போர் கூடத்தை நிர்மாணிக்க 2008 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை மூலதன செலவினமாக அரசாங்க நிதியங்களால் ரூபா 3,830.87 மில்லியன் மற்றும் வெளிநாட்டு கடனின் கீழ் 2008 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ரூபா 851.2 மில்லியன் | அதிகார சபையின் மதியுரை சேவையின் மீது செயற்பட்ட செயற் திட்டமொன்றாகும். 2013 ஆண்டில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் உரிய நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டு இருந்த போதும், குறித்த ஒப்படைப்பு மேற்கொள்ளும் வரை முகாமைத்துவ | வெளிநாட்டு கடனை மீள் செலுத்த வருமானம் ஈட்ட முடியுமான செயற் திட்டத்தை தெரிவு செய்து செயற்படுத்த வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | (அமெ.டொ மில்லியன் 6.4) மூலதன செலவு செலவிடப்பட்டிருந்தன. அதற்கு மேலதிமாக இந்த மண்டபத்தை பராமரித்துச் செல்ல மீண்டுவரும் செலவினமாக 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை மாத்திரம் ரூபா 75.88 மில்லியன் அதிகார சபையினால் செலவிட்டிருந்த போதும் அச் செயற்திட்டத்திலிருந்து 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை வருமானமாக ரூபா 15.89 மில்லியன் மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக இச் செயற்திட்டம் பொருளாதார ரீதியாக பயனுள்ள செயற்திட்டமொன்று அல்லாதது என அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகளை பேணிச் செல்ல நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நேர்ந்துள்ளது. | |
| (ஆ) | அதிகார சபைக்கு சொந்தமான பம்பலபிட்டிய புகையிரத பாதையில் 01 ஏக்கர் 23.1 பர்சஸ் காணியொன்று நீண்ட கால குத்தகை தொகையை அறவிடாது ரூபா 100 வருடாந்த பெயரளவு வாடகைக்கு 99 வருட குத்தகைக்கு மாடிவீடு மற்றும் கடையறைகளை நிர்மாணிக்க 1993 ஆண்டு இறுதியில், அதிகார சபையினால் ரூபா 92 மில்லியன் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ரூபா 120 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. இச் ஆதனத்தை முகாமை செய்வதற்காக வ/ப ஓஷன்வீவ் டிவலப்மன்ட் தனியார் கம்பனி பெயரில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கூட்டு வியாபாரமொன்றை ஆரம்பித்திருந்தது. இக் கம்பனியினால் கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டி இருந்ததுடன் 1993 ஆண்டு முதல் 2019 ஆண்டு இறுதி வரை அதிகார சபைக்கு | 2014, ஆண்டில் ரூபா 1.21 மில்லியன தொகை மற்றும் 2020 ஆண்டில் ரூபா 0.44 தொகையொன்றை இலாப பங்காக அதிகார சபைக்கு வழங்கியுள்ளது. இலாப பங்கு கிடைக்காத நிறுவனங்கள் தொடர்பாக அதிகார சபையினால் முகாமைத்துவத்தினால் எதிர்காலத்தில் கவனத்திற் கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபையினால் ரூபா 92 மில்லியன் முதலீடொன்றை செய்துள்ளதால் இலாப பங்கை பெற்றுக் கொள்ள செயன்முறைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணங்கியவாறு இலாபப் பங்கை வழங்கியிருக்கவில்லை. | | |
| (இ) | ரூபா 190 மில்லியன் மதிப்பீட்டுத் தொகைக்கு ERP (Enterprises Resource Planning) கணனித் தொகுதியொன்றை நிறுவ மதியுரை சேவையை வழங்கியதற்காக 2014 முதல் 2016 வரையான காலததினுள் கூட்டுத்தொகை ரூபா 3.87 மிலலியனான மதியுரைக் கட்டணம் செலுத்தி இருந்த போதும் இத் தொகுதியை நிறுவுவதனை இடைநிறுத்தி இருந்தது. | 2015 ஆண்டின் அரசியல் சூழலில் ஏற்பட்ட மாற்றத்தின் மீது, ERP தொகுதியை இடைநிறுத்த அதன் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்ததுடன், அதிகார சபையின் கணக்கீட்டு நடவடிக்கைகளை பேணிச் செல்ல கணனித் தொகுதியொன்றின் தேவைப்பாடு உனரப்பட்டதால் புதிய கணக்கீட்டுத் தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் ERP தொகுதி நிறுவப்படவில்லை. | நிறுவனத்தின் தேவைப்பாட்டை திட்டவட்டமாக இனங்கண்டு பெறுகை நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2010 பெப்ரவரி 03 திகதிய இலக்கம் SP/RD/02/10 கொண்ட சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 3.4 பந்தி பிரகாரம் அதிகார சபையினால் நகர அபிவிருத்திக்காக வழங்கியுள்ள காணிகள் பெறுமளவு சுவீகரித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி அல்லது பல வருடங்களின் பின்னர் ஆரம்ப உரிமையாளருக்கு மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. (சுய ஒப்படைப்பு) மாதிரி கணக்காய்வ பரிசோதனையின் போது வெளிப்படுத்திக் கொண்டவாறு மில்லேவ அக்கர தஹசக வத்த, புறக்கோட்டை ஒள்கொட் மாவத்தையில் அச்சகமொன்றிற்கு சொந்தமான 125 பர்சஸ் காணியை, காலியில் தடெள்ள காணியை மற்றும் ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுற பாதையில் அமைந்துள்ள 03 ஏக்கர் 2 ரூட் 03 பர்சஸ் காணியை இவ்வாறு சுய ஒப்படைப்பு செய்யப்பட்டிருந்தது. | நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக அதிகார சபையின் அதிகாரம் பிகராம் காணிகளை சுவீகரிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் சுவீகரிக்கப்பட்ட நோக்கத்திற்காக மாத்திரமே அக் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒப்படைக்கப்படுகின்றன. அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்வாறு உரிய அங்கீகாரத்தின் கீழ் காணிகளை சுவீகரிக்கும் நோக்கத்தை திருத்தி அபிவிருத்தி செய்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணிகள் ஒப்படைக்கப்படுகின்றன. மேலும் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களின் எதிர்ப்பு காரணமாக காணிகளை சுய ஒப்படைப்பு மேற்கொள்ள ஏற்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. | நோக்கங்களை சரியாக இனங்கண்டு காணிகளை சுவீகரிக்க வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இணைந்த நிறுவனங்களின் 2018 ஆண்டினுள் செயற்படுத்திய செயற்திட்டங்கள் தொடர்பாக விளப்பரப்படுத்த 13 பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்க அதிகார சபை ரூபா 4.05 மில்லியன் செலவிட்டிருந்தது. | நகர அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு வரிசை அமைச்சின் கீழ் செயற்படும் சுகித்த புறவர செயற்திட்டத்திற்காக வழங்கிய மதியுரை நடவடிக்கைகளுக்கு மதியுரை கட்டணமாக 6% வருமானமொனிறை இவ் அதிகார சபைக்கு வழங்க அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் காரணமாக பணிப்பாளர் அங்கீகாரதின் மீது இக் கட்டணத்தை பயன்படுத்தி செலவிடப்பட்ட செலவினத்தை அதிகார சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | அதிகார சபையின் நோக்கங்களிற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட காலத்தை 5 ஆண்டுகளிற்கு கொழும்பு கோட்டை டிரன்ஸ்வேர்க் சதுக்க காணியை சந்தை பெறுமதியிலும் குறைந்த பெறுமதியான ரூபா 4,999.7 இற்கு தேசிய ரீதியாக நிறுவப்பட்ட வெளிநாட்டு தனியார் கம்பனியொன்றிற்கு கலப்பு அபிவிருத்தி செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக 2012 ஆண்டில் நீண்ட கால அடிப்படையில் குத்தகை வழங்கப்பட்டிருந்தது. இவ் அபிவிருத்தி செயற்திட்டத்தை 2018 ஆண்டு வரையும் ஆரம்பிக்காததால் குறித்த கம்பனியுடன் செயற்திட்டம் தொடர்பாக கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கையை திருத்தி செயற்திட்ட ஆரம்ப திகதியை 2018 ஜுலை 04 ஆக மற்றும் முடிவு செய்யும் காலத்தை 2023 ஜுலை ஆகவும் மாற்றப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆரம்ப குத்தகை பெறுமதிக்கும் 2018 ஜுலை 04 திகதிக்கு சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமான ரூபா 1,290.04 மில்லியன் 2018 ஆண்டில் | அதிகார சபைக்குரிய காணிகளை குத்தகை வழங்கும் அடிப்படையில் வழங்கும் போது அறவிட முடியுமான குத்தகை பெறுமதியானது குறித்த குத்தகை காலத்தன் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது. இக் காணியிற்காக பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட 99 வருட குத்தகை பெறுமதியை முதலீட்டு கம்பனியினால் அதிகார சபைக்கு செலுத்தியுள்ளது. காணியின் சந்தைப் பெறுமதி மற்றும் குத்தகை பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தால் அபிவிருத்தி செயற்திட்டதினுள் நிர்மாணிக்கப்படும் வீட்டு அலகளின் வீட்டு நில அளவின் மீது விற்பனை அடிப்படையில் வழங்கப்படும் மொத்த வீட்டு நில அளவின் பிரகாரம் கணக்கிடப்படும் விகிதத்தின் மீது 99 வருட குத்தகை பெறுமதி மற்றும் சந்தை பெறுமதிக்கு இடையில் வித்தியாசமான ரூபா 1,250.4 மில்லியனான தொகையிலிருந்து விகிதாசார | உடன்படிக்கை கைச்சாத்திடும் போது அதிகார சபைக்கு நிதி நட்டமொன்று இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியிடமிருந்து மீண்டும் அறவிட அதிகார சபை தீர்மானித்திருந்த போதும் அதனை 2022 நவம்பர் 30 வரை அறவீடு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மேலும் கூட்டு ஆதன அலகுகளிற்குரிய உறுதிகளை வீடு பெறுவனர்களுக்கு வழங்கும் போது அரச மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கும் காணியின் சந்தைப் பெறுமதிக்கும் காணியை வழங்கிய பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசத்தை செலுத்த வேண்டியது ஆரம்ப குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதிக்கு நிலவும் சந்தைப் பெறுமதிக்கா அல்லது கூட்டு ஆதன அலகிற்காக வீடு பெறுனர்களுக்கு உறுதி வழங்கப்படும் திகதிக்கு நிலவும் சந்தை பெறுமதியா என திட்டவட்டமாக குத்தகை உடன்படிக்கைகளில் குறிப்பிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை அதன் காரணமாக வீடுகளை விற்பனை செய்யும் திகதியன்று காணப்படும் விற்பனை விலை அதிகரிக்கும் நலன்கள் மொத்தமாக ஒப்பந்ததாரருக்கு கிடைப்பதாக அவதானிக்கப்படடது. | தொகையை வீட்டு அலகுகளிற்காக விற்பனை செய்து வழங்கும் போது அறவிடப்படும். | |
| (இ) | அதிகாரி சபைக்கு சொந்தமான கோட்டை டி.ஆர்.விஜேவர்தன மாவத்தைக்கு எல்லையாக அமைந்துள்ள 2 ஏக்கர் 2 ரூட் 21.4 பர்சஸ் அளவான காணியை பகிரங்க விலைமணு கோராது முன்னைய அதாவது 2007 ஆண்டு முதல் கலப்பு அபிவிருத்தி செயற்திட்டமொன்றிற்காக காணியில் பயன்பாட்டை உடமையை Rank Entertainment Holding Limited கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் | முகாமைத்துவ சபையின் தீர்மானமொன்றின் பிரகாரம் தற்போது குத்தகைதாரரிற்கு (2022 மார்ச் மாதம்) அறிவித்தது அனுப்பி இருந்ததுடன், 2022 ஏப்ரல் 22 திகதி அக் கடிதத்திற்காக பதில் கடிதமொன்றை அனுப்பி மீண்டும் தீர்மானத்தை கவனத்திற் கொள்ளுமாறு மேல்முறையிடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்றுக் கொண்டு முகாமைத்துவ சபைக்கு சமர்பித்து | காணியை சுவீகரித்ததன் பின்னர் உரிய முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென மற்றும் மேற்பார்வை செய்ய வேண்டுமென. |

இரண்டு வருடங்களின் பின்னர் அதாவது 2009 ஆகஸ்ட் 12 திகதி இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2010 பெப்ரவரி 18 திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் 30 ஆண்டுகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் ரூபா 1,300 மில்லியனிற்கு மதிப்பீட்டு பெறுமதிக்கு இக்காணியின் பயன்பாட்டு உடமையை எழுத்து மூலம் அக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. குத்தகை தொகையை செலுத்தி முடிக்கும் வரை காணியிக் பயன்பாட்டு உடமையை வழங்க்க கூடாத போதும், அதற்கு மாற்றமாக குத்தகை தொகையை செலுத்தி இருக்காத போது காணியின் பயன்பாட்டை ஒப்படைத்துள்ளமை அவதானிக்கப்பட்டது. 2009 ஆகஸ்ட் முதல் 2013 செம்தம்பர் 25 திகதி வரை 07 சந்தர்ப்பங்களில் ரூபா 557 மில்லியன் மாத்திரம் கம்பனியினால் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. கம்பனியினால் மேல் புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம் காணியின் எந்த அபிவிருத்தி நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்காததுடன் அக் காணியை வாகன தரிப்பிடமொன்றாக பயன்படுத்தி 2007 ஆண்டு முதல் வருமானம் ஈட்டியிருந்தது. 2013 மார்ச் 25 திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாற்றமாக மற்றும் ஈட்டிய வருமானத்திலிருந்து குறித்த கொடுப்பனவை செலுத்தி இருக்காத போதும் 2016 ஆகஸ்ட் 12 திகதி பிரதான மதிப்பீட்டாளரின் ரூபா 3,620 மில்லியனான மதிப்பீட்டு பெறுமதிக்கு மீண்டும் 2017 பெப்ரவரி 16 திகதி 50 ஆண்டுகளிற்கு குத்தகை வழங்க அங்கீகாரத்தின் மீது

தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்ப கம்பனியின் உரிமையாளரிற்கு சொந்மான இன்னுமொறு கம்பனியின் பெயரில் உடன்படிக்கை செய்து ரூபா 3,352 மில்லியனிற்கு உடன்படிட்டிருந்தது. மேல் கம்பனி 2007 முதல் 2017 வரை வாகன தரிப்பிடத்திற்கு பயன்படுத்தி வருமானம் ஈட்டிய காலத்தினுள் காணிக்காக செலுத்திய ரூபா 557 மில்லியனிற்கு வட்டியொன்றை அவர்களிற்கு செலுத்த வேண்டுமென விடுத்த கோரிக்கையின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரின் பெறுமதியிலிருந்து ரூபா 330 மில்லியனை குறைக்க அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் முறையான அங்கீகாரம் இன்றி முதலீட்டாளருடன் உடன்பட்டதன் காரணமாக அதிகார சபைக்கு மேற்கொள்ள நேரிட்ட நட்டம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினர் தொடர்பாக எவ்வித செயற்பாடுகளையும் இது வரை எடுத்திருக்காததுடன் 2022 செப்டம்பர் 30 திகதி வரையும் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் அக் காணியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கொழுப்பு 05 மயுர பிரதேசத்தில் 56.5 பர்சஸ் அளவான காணியை தனியார் நிறுவனமொன்றிற்கு 06 மாதங்களிற்காக அதாவது 2016 ஜுன் முதல் நவம்பர் வரையான காலத்திற்கு மாதாந்தம் ரூபா 0.6 மில்லியன் வீதமான மதிப்பிடப்பட் குத்கதை வாடகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அதன் போதான உள்ளக மதிப்பீட்டுக் குழுவின் தவிசாளராக செயற்பட்ட பிரதி பணிப்பாளர் (காணி) இனால் | இது தொடர்பாக 2020.12.30 திகதி உள்ளக விசாரணை ஒன்றை மேற்கொள்ள அதிகார சபையின் நிர்வாக பிரிவிற்கு அனுப்பியதுடன் குறித்த அலுவலர் தற்போது கடமையில் ஈடுபடாததால் உள்ளக விசாரணையை நடாத்துவது பயனற்ற செயலென அறிவித்துள்ளதுடன் அதன் ஆலோசனை பிரகாரம் இக் காணியை வழங்கும் போது அதிகார சபைக்கு ஏற்பட்டதாக கூறப்படும் நட்டம் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு | அதிகாரசபைக்கு நிதி ரீதியான நட்டமொன்று ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழுக் கூட்டத்தை நடாத்தாது எவ்வித நியாயமான காரணங்களையும் காட்டாது ஏற்றுக் கொண்ட மதிப்பீட்டு முறையொன்றை பின்பற்றி மதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்து 70 சதவீதத்தை குறைத்து அதாவது மாதாந்த வாடகை ரூபா 0.2 மில்லியன் வரை குறைத்து முறையான குத்தகை உடன்படிக்கையிற்கு உட்படாது இக்காணியை வழங்கி இருந்ததாக அவதானிக்கப்பட்டது.<br>அவ்வாறே 06 மாதங்களிற்காக குத்தகை வழங்கியிருந்த போதும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ளாது 3½ வருடங்களிற்கு அதாவது 2019 திசெம்பர் 31 திகதி வரை குத்தகை காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br>குத்தகைதாரர் காணியை பயன்படுத்திய காலத்தினுள் முறையாக மதிப்பிடப்பட்ட வாடகையை அறவிடப்படாததால் அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 20 மில்லியனிற்கும் (VAT மற்றும் NBT உள்ளடங்களாக) அதிகமான தொகையாக அவதானிக்கப்பட்டது.<br>இந்த ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அறவிட 2022 ஆண்டு வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரணை ஆணைக்குழுவின் மற்றும் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு தாக்கல் செய்துள்ளதுடன் அதன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது. | |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி அதிகார சட்டத்தின் கட்டளை 196 (07) பிரகாரம் குத்தகை வழங்க முடியுமான உச்ச காலம் 30 வருட காலமென குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாயினும், 1978 இலக்கம் | வருடம் 1900 என குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை பொறுப்புக்களின் குத்தகை உடன்படிக்கையொன்று செயற்படாததுடன், கொடுக்கல் வாங்கல் ஒன்று மாத்திரம் | சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 41 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சட்டம் அங்கீகரிக்கப்பட பின்னர் குத்தகை காலத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு தீர்மானிக்க முடியும். எனினும் 2019 நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 1,516.3 மில்லியனான முதலீட்டு காணிகளிற்காக வழங்கப்படும் அட்டவணை பிரகாரம் அதிகார சபை உருவாக்கப்பட முன்னர் அதாவது குத்தகை வழங்கிய வருடம் 1900 என குறிப்பிடப்பட்டு இருந்த குத்தகை வழங்கள்களிற்கு உரியதாக குத்தகை வழங்கும் அடிப்படையாக 99 வருடங்கள் 50 வருடங்கள் மற்றும் 30 வருடங்களாக குறிப்பிடப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரியதானது. | குறிப்பிடப்பட்டுள்ளது. கணனிக்கு உட்படுத்த குத்தகை பொறுப்பு வழங்கிய ஆண்டில் உட்படுத்தல் கட்டாயம் ஆகையால் ஆரம்ப திகதி 1900 என கணனயில் குறிப்பிடப்பட்டுள்ளது. குத்தகை பொறுப்பு பல வருடங்களிற்கு செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், இது வரை குத்தகை உடன்படிக்கையொன்று செயற்படாது கொடுக்கல் வாங்கல் மாத்திரம் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதால் குத்தகை பொறுப்பு தொடர்பாக பிற்போடப்பட்ட வாடகை கொள்வனவு பதிவேட்டை சீராக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக் குழுவினால் பரிந்துரையை பெற்று தேவையான சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | சிரிபோபுற நிர்வாக கட்டிடத் தொகுதிக்கு அன்டியதாக நிர்மாணிக்கப்படும் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியின் பயன்பாட்டை இலங்கை மகாவெலி அதிகார சபையினால் ஹம்பத்தொட்ட மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைத்திருந்தது. பின்னர் ஹம்பந்தொட்ட நிர்வாக மாவட்ட பொறுப்பு அரச அதிபரினால் அவ்வீடுகளின் பொறுப்பை அவர்களுக் ஒப்படைக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரியிருந்தது. 2012 ஒக்டோபர் 25 திகதி நடாத்தப்பட்ட பொது கணக்குகள் செயற்குழுவினாலும் அதிகார சபையினால் அவ் வீடுகளின் உடமையை ஹம்பந்தொட்ட நிர்வாக மாவட்ட செயலாளரிற்கு 2 மாதங்களினுள் ஒப்படைத்து முடிக்க வேண்டுமென தீர்மானித்து இருந்த போதும் அவ் ஆதனங்களின் உடமையை ஒப்படைத்திருக்கவில்லை. நிலைமை அவ்வாறு | அவ்வாறு உடமைமை பொறுப்பேற்ற காணித் துண்டில் நிர்வாக கட்டிடத் தொகுதி மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிக்கப்பட்டதுடன் பின்னர் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹெக்டேயார் 2.3588 அளவான காணித் துண்டை மற்றும் எதிர்கால வணிக நடவடிக்கைகளுக்கு ஒதுக்கி இருந்த ஹெக்டேயார் 1.6056 அளவான இரண்டு காணித் துண்டுகளையும் அதிகார சபைக்கு பணம் அறவிடாது ஒப்படைக்குமாறு அமைச்சரவை தீர்மானம் கிடைத்துள்ளது. 2012.10.25 திகதி பொது கணக்குகள் செயற்குழுவினால் காணித் துண்டுகளை 2 மாதங்களினுள் ஹம்பந்தொட்ட மாவட்ட செயலாளரிற்கு ஒப்படைக்க எடுத்திருந்த தீரமானம் தொடர்பாக எவ்வித ஆவணமும் அதிகார சபைக்கு அனுப்பியுள்ளதாக எவ்வித | பொது கணக்குகள் செயற்குழுவின் பரிந்துரையையும் கவனத்திற் கொண்டு அமைச்சரவை பத்திரத்தை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கையில் இந்த வீட்டுக் கட்டிடத் தொகுதியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரிக்க அமப/14/0101/503/005 இலக்க மற்றும் 2014 சனவரி 17 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்பித்து அங்கீகாரத்தை பெற்றிருந்தது. அவ் விஞ்ஞாபனத்திற்கு பொது கணக்குகள் செயற்குழுவின் மேற் தீர்மானம் தொடர்பாக எவ்வித தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல் அல்லது கடிதமொன்று கோவையினுள் இல்லை. அதன் காரணமாக இந்த அதிகார சபை அது தொடர்பாக அறிந்திருக்காததுடன் கணக்குகள் செயற்குழுவின் தீர்மானம் தொடர்பாக குறித்த அமைச்சரவை பத்திரத்திற்கு தகவல்களை உள்ளடக்க இந்த அதிகார சபை அறிந்திருக்கவில்லை. குறித்த அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணித் துண்டிற்காக அரச காணிகள் கடட்ளை சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் விஷேட ஒப்படைப் பத்திரம் 2021.06.31 திகதி அதிகார சபைக்கு கிடைத்துள்ளதால் காணியின் தற்போதைய உரிமை நகர அதிகார சபைக்கு சொந்தமாகவுள்ளது. | |
| (இ) | பேலியகொட வெயார்ஹவுஸ் கம்பனியை 2012 ஆண்டில் கலைக்க தீர்மானித்து இருந்ததுடன் மீண்டும் 2014 ஆண்டு முதல் சுமுகமாக வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்ல கலைப்பாளர் தீர்மானித்திருந்தார். எவ்வாறாயினும் அங்கு பண்டகசாலை கட்டிடம் 2017 ஆகஸ்ட 31 திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரித்துக் கொள்ள அதிகார சபையின் பணிப்பளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. 2022 ஒக்டோபர் 31 திகதியளவிலும் கிரயம் ரூபா 376.43 மில்லியனால இப் பண்டகசாலை கட்டிட் தொகுதிக்கு சொந்தமான கட்டிடங்களை எழுத்துமூலம் அதிகார சபைக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் இச் சொத்து 2022 ஆண்டு வரையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் 2017 ஆகஸ்ட் | இப் பண்டகசாலை கட்டிடத் தொகுதியை தொடர்ந்தும் PWCC கம்பனியின் கணக்கு புத்தகங்களில் குறிப்பிடப்பட்டள்ளதுடன் கலைப்பாளரினால் கலைப்புக் கணக்கை சமர்பிக்கும் வரையில் அதிகார சபையின் கணக்குகளிற்கு எடுக்க முடியாது. எவ்வாறாயினும் கலைக்கும் கணக்குகளை சமர்பிப்பதன் கீழ் 2017.08.31 திகதி முதல் அப் பண்டகசாலை கட்டிடத் தொகுதிகளின் முகாமைத்துவம் நகர அபிவிருத்தி அதிகாரி சபைக்கு ஒப்படைத்துள்ளதால் இவ் வாடகை தொகையை ஈட்டியுள்ளதுடன் அத் தொகையை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குகளிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | கலைப்பு நடவடிக்கைகளை முடிவு செய்வதற்காக தேவையான தலையீட்டை மேற்கொள்ள வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | மாதம் முதல் நகர அபிவிருத்தி சபையினால இப் பண்டகசாலை கட்டிடத் தொகுதியை வாடகைக்கு வழங்கி 2019 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 62.69 மில்லியனான மாதாந்த வாடகை வருமானமொன்றை ஈட்டி கணக்கீடு செய்திருந்தது. | | |
| (ஈ) | காலி நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எலோசியஸ் தேசிய பாடசாலை விளையாட்டரங்கை, சர்வதேச கிரிகட் விளையாட்டரங்கு மற்றும் விளையாட்டு கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2006 ஆரம்ப பகுதியில் 16 ஏக்கர் 3 ரூட் 0.57 பர்சஸ் (ஹெக்டயார் 6.782) ஆன தடெல்ல காணியை சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது அங்கு வீடுகள், பயிர்கள் மற்றும் வியாபாரங்கள் நிலவின. அவ்வாறாயினும் 2007 ஆகஸ்ட் 14 திகதிய வர்த்தமானி அறிவித்தல் ஊடாக காணியை சுவீகரித்திருந்ததுடன் 2007 செப்தம்பர் 10 ஆம் திகதி அதிகார சபை அவற்றின் உடமையை பொறுப்பேற்றிருந்தது. 2006 நவம்பர் 21 திகதி மான்புமிகு சனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றில் சர்வதேச கிரிகட் விளையாட்டு அரங்கை தற்போது நிர்மாணித்துள்ள இடத்திலேயே ஸ்தாபிக்க தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் தடெல்ல காணியை அப் பணிக்காக ஈடுபடுத்தும் நோக்கத்திலிருந்து அகற்றியிருந்ததாக அவதானிக்கப்பட்டது. மேலும் திகதியின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் காலி நகர அபிவிருத்திக்காக காலி சரவதேச கிரிகட் விளைபாட்டரங்கை நிர்மாணித்தல், எலோசியஸ் வித்தியாலயத்திற்கு விளையாட்டரங்கை நிர்மாணித்தல் ஆகியவற்றிற்கு | காணி சுவீகரிப்பதற்காக 2006.09.25 ஆம் திகதி உள்ளக மதிப்பீட்டுக் குழுவினால் அண்ணளவான மதிப்பீடொன்றை கோரியுள்ளதுடன், 2006.12.07 திகதிய மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 43 மில்லியனை அடிப்படையாகக் கொண்டு 2006.12.07 திகதி காணியை கைபற்றும் ஆவணங்கை தயாரித்து காணி சுவீகரிக்கும் சட்டத்தின் 2 பிரிவின் கீழ் ஏற்பாட்டை 2007.02.26 திகதி பிரசுரித்துள்ளது. 2006.11.21 திகதி சனாதிபதி அவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது காலி புனித எலோசியஸ் விளையாட்டரங்கு மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக லயிட்ஹவுஸ் முன்னால் உன்ன காணிப் பகுதியை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக விடயங்கள் வெளியானதால் காணியை கைப்பற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது. திறைசேரி ஏற்பாட்டின் கீழ் ரூபா 368.81 மில்லியன் தொகையிலிருந்து இழப்பீடு மற்றும் வட்டியாக ரூபா 281.56 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப நோக்கமான ‘‘சர்வதேச கிரிகட் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்’’ என்பது ‘‘விளையாட்டுக் கட்டிடத்தொகுதியொன்றை நிர்மாணித்தல்’’ ஆக திருத்தப்பட்டுள்ளது. | பொருளாதார ரீதியாக பயன்படுத்தி காணப்படும் காணிகளை சுவீகரிக்கும் போது தேவைப்பாட்டை உரிய முறையில் இனங்கண்டு அதன் பிரகாரம் மாத்திரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இக் காணியை சுவீகரிக்க திட்டமிட்டிருந்தாக மாத்திரம் குறிப்பிட்டு அச் செயற்திட்டம் அத்திகதியளவில் நிருத்தியுள்ளதாக குறிப்பிடாது காணியை சுவீகரிக்கும் நடவடிக்கையை முடிவு செய்ய இழப்பீட்டுத் தொகையை தீர்ப்பதற்கு ரூபா 400 மில்லியன் தொகையொன்றை பொது திறைசேரியிலிருந்து கோரியிருந்ததுடன் 2021 ஜுலை 13 திகதியளவில் ரூபா 281.569 மில்லியன் அதற்காக இழப்பீட்டு மற்றும் வட்டியாக செலுத்தப்பட்டிருந்தன. 2021 ஜுலை 13 திகதியளவில் அந்த சுவீகரிக்கப்பட்ட 16 ஏக்கர் 03 ரூட் காணியிலிருந்து பெறும்பகுதி விளைவற்று நிலவின. | | |
| (உ) | நகர புணர்ஜீவன செயற்திட்டத்தின் 21 உப செயற்திட்டங்களின் கீழ் குறைவருமான குடும்பங்களிற்கு ரூபா 48,090 மில்லியன் செலவில் 2013 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 13,580 வீடுகளை நிர்மாணித்து ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 12,875 வீடுகளிற்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழை பெற்றுக் கொள்ளாத காரணத்தால் அவ் வீடுகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் வீட்டு உடமையாளர்களுக்கு ஒப்படைக்க முடியாததால் அப் பராமரிப்பிற்காக அதிகார சபைக்கு பாரிய கிரயமொன்றை மேற்கொள்ள ஏற்பட்டிருந்தது. வீடுகளை ஒப்படைத்து பல வருடங்கள் கடந்திருந்த போதும் அதிகார சபையினால் 2003 இன் 24 இலக்க பொது வசதிகள் சபை (திருத்திய) சட்டத்தின் 3(2)(ஆ) பிரிவு பிரகாரம் அவ்வீடுகளிற்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழை கிடைக்கப் பெறாததற்கு காரணமாக அமைந்த விடயங்களை சரிசெய்து கொண்டு அச் கூட்டு ஆதன சான்றிதழை பெற்றுக் | இதற்காக பயன்படுத்திய பெரும்பாளான காணிகளின் அதிகார சபைக்கு சொந்தமானதல்லாததுடன் அந்த காணிகளை இவ்வதிகார சபைக்கு சுவீகரப்பது நீண்ட செயன்முறையானதுடன் அதற்கிடையில் வீட்டுக் கட்டிடத்தொகுதியை நிர்மாணித்து மறுசீரமைப்பு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டது. அதற்கிடையில் கூட்டு ஆதன சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. சில வீடமைப்பு செயற்திட்டங்களில் உத்தேச கட்டிடங்களிற்கிடையில் ஒரு கட்டிடம் அல்லது சிலவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதும் ஏனைய கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்படாததால் இணக்கப்பாட்டு சான்றிதழை பெற்றுக் கொள்ளும் போதும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. 06 வீடமைப்பு செயற்திட்டங்களிற்காக கூட்டு ஆதன சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. சகாதிபத்தி சான்றிதழ் பெற்றுக் | அதிகாச சபைக்கு செலவிட நேரிடும் செலவுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொண்டதன் பின்னர் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தை நிறுவ குறைந்தது 50% சட்ட ரீதியான உறுதி மூலம் உரிமை ஒப்படைக்கப்பட்டு இருக்க வேண்டும். சமமான மாதாந்த தவனைகளில் 30 வருடங்கள் பூராக வீட்டாளர்களிடமிருந்து அறவிட்ட பின்னர் அதன் உரிமையை உறுதியொன்றின் மூலம் ஒப்படைத்தல் தற்போது நடைமுறையிலுள்ள முறையாகும். தற்போது நகர புணர்ஜீவன செயற்திட்டத்தின் வீடுகளை வழங்கும் கொள்கையை மீண்டும் பின்னூட்டல் செய்யப்படுவதுடன், தற்போது காணப்படும் முறைமை மூலம் கூட்டு ஆதன வரைபடத்திற்காக அங்கீகாரம் பெறப்பட்ட போதும் வீடமைப்பு செயற்திட்டங்களின் முகாமைத்துவ நடவடிக்கைகளிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுபட முடியாது. | |
| (ஊ) | கொம்பனித்தெரு புனரமைப்பு செயற்திட்டத்திற்கு சொந்மான காணியில் குடியேரியுள்ள குடும்பங்களிற்காக மாடிவீடு நிர்மாணிக்கும் நடவடிக்கையை 2015 ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் காணி அபிவிருத்தியாளர்களால் நிர்மாண நடவடிக்கைகளை ஒப்படைத்திருந்த ஒப்பந்ததாரரின் தாமதத்தின் மீது குறித்த செயற்திட்டம் தாமதாமாகி இருந்தது. அதன் காரணமாக 2017 ஆண்டினுள் குறித்த நிர்மாண பணிகளின் மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 5.49 மில்லியனான மேலதிக மதியுரைக் கட்டணம் மற்றும் காணியில் குடியேரியிருந்த குடும்பங்களிற்காக மாடிவீட்டு அலகுகளை வழங்கும் வரை மாதாந்த வாடகையாக ரூபா 61.19 மில்லியனாக கூட்டுத் தொகை ரூபா 66.69 மில்லியனை | டாட்டா ஹவுஸின் டிவலப்மன்ட் தனியார் கம்பனி எஸ்.ஜீ.18 ரியலிடி தனியார கம்பனி மற்றும் அதிகார சபைக்கிடையில் 2012 மார்ச் 15 திகதி உடன்பட்டுள்ள புரந்துணர்வு உடன்படிக்கையின் இலக்கம் 07 பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் இரண்டும் இரண்டு ஆண்டு காலத்திற்கு தற்காலி குடியிருப்பிற்காக வாடகை தொகை செலுத்த அல்லது நிர்மாணம் பூர்த்தியாகும் வரை எனும் இரண்டில் இறுதி சந்தர்ப்பம் வரை இழப்பீட்டுத் தொகை செலுத்துதல், தற்காலிக வாடகை தொகை செலுத்தல் மற்றும் அகற்றுதலிற்குரிய செலவுகளை செலுத்துதல் எனும் அனைத்தையும், | தாமதத்திற்கான சரியானக காரணம் மற்றும் காணி அபிவிருத்தியாளர்களுடன ான உடன்படிக்கையை மீளாய்வு செய்து தொடரந்தும் இடம்பெறும் செலவுகளை அறவிடும் இயலுமையை கண்டறிய வேண்டியதுடன் குறித்த நிர்மாணங்களை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார சபையினால் செலுத்தி இருந்த போதும் காணி அபிவிருத்தி கம்பனியினால் அத் தொகையை 2022 ஜுன் 30 திகதி வரையும் மீள்நிரப்பி இருக்கவில்லை. | அனைத்து அகற்றுதல்களையும் அகற்றி ஒருமாத காலத்தினுள் மீள்நிரப்புவதாகவும், மேற்குறிப்பட்ட அனைத்து செலவுகளையும் அ.டொ 3 மில்லியனை விட அதிகரிக்க கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. டாடா கம்பனியினால் புரிந்துணர்வு உடன்படின்கையில் குறிப்பிடும் அ.டொ 3 மில்லியன் அளவை (ரூபா 472 மில்லியன்) செலுத்தி முடுத்துள்ளதாக குறிப்பிட்டு எஞ்சிய காலத்திற்காக வாடகை செலுத்துவதை மறுத்துள்ளதால் அதிகார சபையினால் மேலதிகமாக செலவிட்ட மேலதி மதியுரை கட்டணம் மற்றும் தற்காலிக வாடகை தொகையை அபிவிருத்தி கம்பனியிடமிருந்து மீள்நிரப்பிக் கொள்ளும் பிரச்சினை காணப்படுகின்றது. | |
| (எ) | 2018 இல் பணிகள் பூர்த்தி செய்திருந்த 500 வீட்டு அலகுகளுடன் கூடிய அங்கொட லேக் கிரிஸ்ட் வீட்டமைப்பு செயற்திட்டத்தின் வீட்டாளர்களினால் ரூபா 816.3 மில்லியம் தொகையை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தி பூர்த்தி செய்திருக்கையில் அவ் வீட்டாளர்களுக்கு சட்ட ரீதியான உரிமையை ஒப்படைத்தல் 2021 செப்டம்பர் வரையும் மேற்கொண்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்திகாகவும் கூட்டு ஆதன அதிகார சபை சான்றிதழை 2021 ஆண்டு இறுதிவரையும் பெற்றிருக்கவில்லை. | கூட்டு ஆதன திட்டத்தின் பிரச்சினைக்குறிய நிலைமைகளை தீர்த்துக் கொண்டு ஒப்படை உறுதிகளை உரிய வீட்டாளர்களுக்கு வழங்க முன்னர் கூட்டு ஆதன வெளிப்படுத்தல் உறுதியை காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்ய வேண்டியுள்ளது. தற்போது கூட்டு ஆதன வெளிப்படுத்தல உறுதியை பதிவுசெய்வதற்குரிய அனைத்து செயற்பாடுகளும் பூர்த்தியாகிக் காணப்படுவதுடன் காணி பதிவாளர் அலுவலகத்தில் அவ் உறுதிகளை பதிவு செய்ய வேண்டியுள்ளன. | வீட்டாளர்களுக்கு உரிமை உறுதியை உரிய திகதிக்கு வழங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுற மாவத்தையில் அமைந்துள்ள வீதவரி இலக்கம் 294/800 மற்றும் 953/1 கொண்டு இடங்களில் அமைந்துள்ள ஏக்கர் 03 ரூட் 02 பர்சஸ் 03 அளவான 03 காணித் | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையை நிர்வாக தலைநகராக அபிவிருத்தி செய்யும் அரச கொள்கை பிரகாரம் நிதி மற்றும் நிர்வாக நிறுவன கட்டிடத் தொகுதி ஒன்றை நிர்மாணிக்க | நக அபிவிருத்திக்காக தேசிய ரீதியாக ஒழுங்கான கொள்கை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| துண்டுகளை நிதி மற்றும் நிர்வாக நிறுவனம் உள்ளிட்ட நகர அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த 2013 ஒக்டோபர் 09 திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சுவீகரித்திருந்தன. எனினும் இவ்வாறு சுவீகரித்த காணிகளிலிருந்து 01 ஏக்கர் 02 பர்சஸ் அளவான காணியை 2015 பெப்ரவரி 02 மற்றும் 2016 நவம்பர் 18 திகதி ஆரம்ப உரிமையாளர்களுக்கு மீள் ஒப்படைத்திருந்தன. எஞ்சிய 01 ரூட் 12 பர்சஸ் அளவான காணிக்காக பூர்த்தியாகாத வேலைகளின் கீழ் 2019 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 213.21 மில்லியன் பெறுமதியொன்று குறிப்பிட்டிருந்த போதும் அக் காணித் துண்டுகளை 2021 ஜுன் 30 திகதி அளவிலும் எவ்வித அபிவிருத்தி பணிகளிற்காகவும் ஈடுவடுத்தியிருக்கவில்லை. | பொறுத்தமான இடமொன்றாக 2013 ஆண்டின் போது குறை பயன்பாட்டுடன் நிலவிய இக் காணியை அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ளது. காணிகளை சுவீகரிக்கும் சட்டத்தின் 38 அ உப ஏற்பாடடின் கீழ் 2013.10.09 திகதி 03 காணித் துண்டுகளை அதிகார சபைக்கு சுவீகரிக்கப்பட்டுள்ளன. | |

## 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டில் 99 குத்தகை முறையின் கீழ் ராஜகிரயவில் அமைந்துள்ள 03 ஏக்கர்களை விடக் கூடிய அளவான காணிகளை கலப்பு செயற்திட்டமொன்றாக செயற்படுத்த முதலீட்டு கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மதிப்பீட்டுத் தொகையை செலுத்த முடியாததன் மீது ஆரம்ப முதலீட்டாளரை இரத்துச் செய்து வேறு முதலீட்டாளர் ஒருவருக்கு மீண்டும் வழங்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் 2022 ஒக்டோபர் 31 திகதியளவிலும் அக்காணியில் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ராஜகிரிய காணியில் கலப்பு அபிவிருத்தி செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட முதலீட்டு கம்பனி அதிகார சபைக்கு ரூபா 345 மில்லியன் தொகையை உறுதிசெய்யும் கட்டணமாக 2014.10.30 திகதி செலுத்தியுள்ளது. பிரதான மதிப்பீட்டாளின் பிரகாரமான தொகையை செலுத்தி முடிக்க இயலாததால் இக் காணியை அக்கம்பனிக்கு குத்தகை வழங்க எடுத்திருந்த தீரமானத்தை முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. கம்பனியினால் இந்த அதிகார சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னர் நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்தின் பிரகாரம், அக் | உடன்படிக்கை பிரகாரம் ஒப்படைக்கப்பட்ட காணியை ஒப்படைத்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதாக அதிகார சபையினால் மேற்பார்வை செய்ய வேண்டுமென. |

| | | |
|---|---|---|
| | கம்பனியினால் அதிகார சபைக்கு செலுத்த நடவடிக்கை எடுத்திருந்த ரூபா 345 மில்லியனான தொகையை நீதிமன்றத்தில் வைப்புச் செய்ய தீர்மானிக்கப்பட்டது. பின்னர் நீண்டகால குத்தகை அடிப்படையில் வேறொரு கம்பனிக்கு குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபைக்கு சொந்தமான புறக்கோட்டை ஷாமஸ் தானிய களஞ்சியம் அமைந்துள்ள 9 ஏக்கர் 3 ரூட் 27 பர்சஸ் அளவான காணியை குத்தகை வழங்க விலைமனு கோருகையில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக சட்டரீதியற்ற வகையில் குத்தகை உரிமையாளரினால் நிலையான கடையறைகளை உபகுத்தகை வழங்கல் செய்யப்பட்டிருந்தன. இதற்காக உரிய நடவடிக்கைகளை அதிகார சபையினால் மேற்கொள்ளாதமை மறைமுகமாக அதற்கான அங்கீகாரத்தை வழங்குவதாக அவதானிக்கப்பட்டது. இந்த உப குத்தகை வழங்கல் 2022 மே 31 திகதி வரையும் இடம்பெற்றுள்ளதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக காணியை உபகுத்தகை வழங்குவது தொடர்பான சட்ட சிக்கல்கள் ஏற்படுமென அவதானிக்கப்பட்டது. மேலும் குத்தகை நிபந்தனைகளை குத்தகை வழங்கியதன் பின்னர் அதிகார சபையினால் 02 சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்தன. இது காணிகளை குத்தகை வழங்கும் போது உச்ச விலைகளை | 2018.12.05 திகதிய கடிதம் மூலம் வழங்கியிருந்த உப குத்தகை வழங்கும் அனுமதியை 2019.02.13 திகதிய கடிதம் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட அறைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டன. மீண்டும் விலைமனு கோரியதன் பின்னர் இக்காணியின் வாகன தரிப்பிடத்தை ரூபா 4.95 மில்லியனிற்கு வரியற்ற மாதாந்த வாடகைக்கு வேறொரு டென்டர்தாரருக்கு 2 வருட குத்தகை காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது | அதிகார சபைக்கு சொந்தான காணிகளிலிருந்து அதிகார சபைக்கு உச்ச பயன்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

பெற்றுக் கொள்ளவிருந்த சந்தர்ப்பங்களை அதிகார சபையினால் இழந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

### 3.6 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் செயற்திட்டமான கொழும்பு நகரத்தில் குடிசைவாசிகளுக்கு நிலையான 68,000 வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலை திட்டத்திற்கு நிதியத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அதிகார சபையினால் 2010 ஒக்தோபர் மாதத்தில் ரூபா 10 பில்லியன் பெறுமதியான 5 ஆண்டுகளில் விடுவிக்க வேண்டிய கடன் பத்திரங்களை விநியோகிக்கப்பட்டிருந்தது. அக் கடன் பத்திரங்ளை விடுவிப்பதற்கு இலங்கை வங்கியிலிருந்து 11 பில்லியன் கடன் வசதியொன்றை 2015 ஆண்டில் பெற்றுக் கொண்டிருந்தது. இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டிருந்த அக் கடனை செலுத்த பொது திறைசேரி ஏற்பாட்டின் மூலம் 2017 ஆண்டில் ரூபா 8.5 பில்லியன் பெற்றுக் கொண்டிருந்தது. எனினும் கடன் பத்திரம் விநியோகித்து 5 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அதன் மூலம் எதிர்பார்த்த நோக்கமான கொழுப்பு நகரினுள் உள்ள 142 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் வியாபார திட்டமொன்று தயாரித்திருக்காததுடன் 68,000 உத்தேச வீடமைப்புத் திட்டத்தில் 12,657 வீடுகளை நிர்மாணித்திருந்ததுடன் அவற்றில் 8,407 மாத்திரம் 2019 திசெம்பர் 31 திகதியளவில் பொது மக்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும் உத்தேச வீடமைப்புத் திட்டத்திற்காக ரூபா 25 பில்லியனான கடன் பத்திரங்களை விநியோகிக்க அமைச்சரவை அங்கீகாரம் 2020 | கொழும்பு நகரத்தில் குடிசைவாசிகளுக்கு நிலையான 50,000 வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வெலை திட்டத்தின் கீழ் 23.4036 ஹெக்டயார் அளவான காணியில் 14,607 அலகு வீடுகளுடன் கூடிய 24 வீடமைப்பு செய்த்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 5577 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக நகர புனர்ஜீவன செயற்திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட காணிகள் பயன்படுத்தப்பட்டள்ளது. தற்போது 7334 வீட்டு அலகுகளை குடிசைவாசிகளுக்கு வழங்கவதற்காக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2021.12.31 திகதியளவில் 4294 வீட்டு அலகுகள் அரசாங்க பல்வேறு செயற்திட்டங்களுக்கு வழங்குவதன் மூலம் அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான காணிகளை விடுவித்துக் கொள்ள நேரடியாக பங்களிப்பை வழங்கியுள்ளது. கடன் பத்திரங்களை விநியோகிக்க அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது செலவிட முடியுமான விலைகளின் கீழ் நிர்மாணிக்க உத்தேசித்த வீடமைப்பு செயற்திட்டதிற்காக ஆவதுடன் அக் கடன் பத்திர விநியோகம் இடம்பெறவில்லை. | திட்டமிட்டவாறு செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டியதுடன் நிதியத்தை நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு பயன்படுத்த வேண்டும். |

செப்டம்பர் 10 திகதி மீண்டும் பெறப்பட்டிருந்தது.

### 3.7 செயற்திட்ட அல்லது மூலதனப் பணியிலான தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1.3 பெறுமதியான 15 செயற்திட்டங்களை 2017 ஆண்டில் ஆரம்பித்திருந்ததுடன் மீளாய்வாண்டு நிதக்கூற்றுக்களில் பூர்த்தியாகாத வேலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்கள் 2022 மே மாதமளவில் கைவிடப்பட்டிருந்தன. | இச் செயற்திட்டங்கள் தொடர்பாக உரிய அங்கீகாரங்களை பெற்று ஏடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சாத்தியப்பாட்டு ஆய்வொன்றின் பின்னர் செயற்திட்டங்களை இனங்கண்டு செலவு மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி மாதத்தில் ஆரம்பித்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பூர்த்தி செய்ய உத்தேச 5 செயற்திட்டங்களுடன் கூடிய ரூபா 400 மில்லயன் மதிப்பீட்டு பெறுமதியான பேரே வாவியின் மேற்குக் கரை அபிவிருத்தி செயற்திடட்த்தில் ரூபா 20 மில்லியனான ஒரு செயற்திட்டத்தை செயற்படுத்தி இருக்காததுடன் ரூபா 95 மில்லியன் பெறுமதியான ஒரு செயற்திடட்தின் பௌதீக செயலாற்றுகை 2022 ஏப்ரல் 15 திகதிக்கு 50 சதவீதமளவானது. | மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்கு 2021 ஆண்டில் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் மதிப்பீடு தயாரித்து 2021 ஜுன் அளவில் முடிவடைந்தது. அதனை ஒப்பந்தம் வழங்க தாமதித்த காரணத்தால் தேவையான பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியவில்லை. புதிய செயற்திட்ட வழங்கல் 2021.10.14 ஆனதுடன் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி 2022.04.15 ஆனதுடன் தற்போது முன்னேற்றம் 50 சதவீதம் அடையப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2013 ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்பாண வாடிவீட்டை நிர்மாணிப்பதற்காக ரூபா 77.48 மில்லியன் அதிகார சபையினால் செலவிடப்பட்டு இருந்ததுடன் இச் செயற்திட்டத்திற்காக நிதி ஈடுபடுத்தலை நிறுத்தியிருந்ததால் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தது. | 2015 ஆண்டில் புதிய அரசாங்கள் பதவிக்கு நியமிக்கப்பட்டதுடன் 2020 ஆண்டு வரை தற்காலிகவ நிறுத்தப்பட்டுள்ளது. தற்போதைய முகாமை விஷேட கவனம் செலுத்தி கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுள்ளதுடன் தனியார் துறையின் நிதிப் பங்களிப்புடன் மற்றும் அரசாங்க தனியார் முதலீடொன்றாக முன்நடவடிக்கை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்படுகின்றன. | சாத்தியப்பாட்டு ஆய்வின் பின்னர் செயற்திட்டத்தை ஆரம்பித்து முடிவு வரை மேற்கொள்ள முடியுமானவாறு திட்டத்தை தயாரிக்க வேண்டுமென. |

### 3.8 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 பிரிவு பிரகாரம் எதிர்வரும் 03 ஆண்டுகளிற்கு தொடர்பான பெறுகைகள் செயற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் பிரதான பெறுகைகள் திட்டமொன்று மற்றும் மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டமொன்றும் அதிகார சபையினால் தயாரித்திருக்கவில்லை. | அரச பெறுகைள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் 2019 ஆண்டிற்காக பிரதான பெறுகைள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. | எதிர்வரும் 03 ஆண்டுகளிற்கு பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையினால் பெறுகைகள் செயன் முறையினுள் காணியை தீர்த்துக் கொள்ளல், குறிப்பான திட்டத்தை தயாரித்துக் கொள்ளல் போன்ற பிரதான விடயங்களை பூர்த்தி செய்யாது ஒப்பந்தத்தை வழங்கியுள்ளமை மற்றும் தீர்க்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ஒப்பந்தம் வழங்கி அதற்காக முற்பணம் செலுத்தியிருந்தமை, பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு இணங்காத வகையில் செயலாற்றுகை பிணைமுறி பெற்றுள்ளமை, பிணைமுறிகளின் கால நீடிப்பை உரிய நேரத்தில் மேற்கொள்ளமை, விலை மதிப்பீட்டின் போது உருப்படியின் உருப்படிக்கு விலைகளை செம்மையாக்கிய விரிவான பதிவேட்டை தொழிநுட்ப ஆய்வு அறிக்கையினுள் உள்ளடக்காமை மற்றும் மொத்த விலைக்காக மாத்திரம் செம்மையாக்கல் | எதிர் காலத்தில் தொழிநுட்ப ஆய்வுக் குழுவை அறிவூட்டி விலை செம்மையாக்கல் தொடர்பாக விரிவான பதிவேட்டை தொழிநுட்ப ஆய்வு அறிக்கைகளிற்கு உள்ளடக்க மற்றும் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | பெறுகைகள் மேற்கொள்ளும் போது விழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டு மதிப்பீடு செய்துள்ளமை, தொழிநுட்ப பதிப்பீட்டு அறிக்கையில் மதிப்பீட்டு செயன்முறை மற்றும் தீர்மானம் தொடர்பான குறிப்பு உள்ளடக்கப்படாமை மற்றும் பகிரங்க விலைமனு கோராது காணிகளை நீண்ட காலத்திற்கு குத்தகை வழங்கல் போன்ற பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்கி செயற்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8:13:3 பிரிவு பிரகாரம் ஆரம்ப கிரயத்தின் 10 சதவீத உச்சம் வரையான ஒப்பந்த வேறுபாட்டிற்காக எதிர்பாரா ஒதுக்கீட்டினுள் 10 சதவீத உச்சம் வரையான நிறுவன தலைவரிற்கு அங்கீகாரம் வழங்க முடியும். எனினும் ஒப்பந்த வேறுபாடு எதிர்பாரா ஒதுக்கீடு 10 சதவீதத்தை விஞ்சுவதாயின் அல்லது எதிர்பாரா ஒதுக்கீடு இல்லாவிடின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8:13:4 பிரிவு பிரகாரம் நிறுவனத் தலைவரினால் மொத்த கிரய மதிப்பீட்டை திருத்தி அங்கீகாரத்திற்கு பெறுகைகள் கைநூலில் குறிப்பிடப்படும் அதிகார மட்டத்திற்கு சமர்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் அதிகார சபையின் கணக்கீட்டு தொகுதி நிறுவுவதற்கான ஒப்பந்தத்தின் மேலதிக வேலைகளிற்காக உரிய அளவைவிட ரூபா 4.83 மில்லியன் அதாவது 60 சதவீதமான முரண்கள் அவதானிக்கப்பட்ட போதும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8:13:4 இல் | கணக்குத் தொகுதியை செயற்படுத்தும் சந்தர்ப்பத்தில் இனங்கண்ட புதிய விஷேட அம்சங்கள் அவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. அங்கு ஆரம்ப விலைமனு கோரும் போது இனங்கண்டு அளவுத் திட்டத்திற்கு இணங்க விலைமனு கோரும் பதிவேட்டுடன் சமர்பிக்கப்பட்டதுடன் அதன் அளவுத் திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டிருப்பது கணக்கீட்டுத் தொகுதியில் முக்கியமாக தேவைப்படும் உருப்படிகள் மாத்திரமே.<br><br>பணியை முன்னெடுக்கும் போது அந்தந்த பிரிவுகளில் ஏற்படும் சிக்கல்களின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவுகளினதும் மேலதிக பணிகளுக்காக ரூபா 4.83 மில்லியன் அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்றி வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் முரண்களிற்குரிய அதிகார மட்டங்களில் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அதிகார சபையினால் பண்டங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய ஒப்பந்ததாரர்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாதிடுகையில் ஒப்பந்தத்தை ஆரம்பிக்கும் திகதி, ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய வேண்டிய திகதி, தாமத கட்டணம் அறவிடும் நிபந்தனைகள், வேலை ஆரம்பிப்பதற்கான முற்பனம் தொகை வழங்குதல் மற்றும் முற்பன் தொகை அறவிடல், செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள், துணை பட்டியல் விடிவிக்கதல், நிறுத்த வரி தொகை போன்ற விடயங்கள் பெறகைகள் வழிகாட்டி கோவையின் 8.9.3 பந்தி பிரகாரம் தேசிய பெறுகைகள் முகவர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிய உடன்படிக்கை படிவத்தினுள் உள்ளடக்கி முறையான உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கைக்க உள்ளாகும் போது உரிய உடன்படிக்கை ஒப்பந்த தரவுகள் உள்ளடங்கும் பகுதியில் உடன்படிக்கையின் ஒப்பந்தத்தை ஆரம்பிக்கும் திகதி, ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய வேண்டிய திகதி, தாமதத்திற்கான அறவிடல் செலுத்த வேண்டிய திகதிகள் போன்ற அனைத்தையும் உள்ளடங்யுள்ளது. | சட்ட ரீதியான ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக பெறுகைகள் வழிகாட்டியின் படி உடன்படிக்கைக்கு கைச்சாத்திட வேண்டுமென. |

## 3.9 வேறு அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்யையின் 8.3.9 பந்தி பிரகாரம் பொது முயற்சிகளிற்கு சொந்தமான சொத்துக்கள் வரிசை அமைச்சின் கீழ் அல்லது வேறு அரச நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட முடியாத போதும் அதற்கு மாற்றமாக அதிகார சபையினால் ரூபா 2.31 | அதிகார சபைக்கு சொந்தமான கெமரா உபகரணங்களை ஊடக அலகில் கடமையாற்றும் அலுவலர் ஒருவரின் பெயரில் மற்றும் விதய இற்கு விநியோகித்துள்ளதுடன் அலுவலர் தற்காலிக அடிப்படையில் பிரதமர் அலுவலகத்திற்கு | சுற்றறிக்கை பிரகாரம் செத்துக்களை விடுவிக்கும் போது நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

| | | |
|---|---|---|
| மில்லியன் செலவில் கொள்வனவு செய்த கெமரா உபகரணங்களை 2018 ஆண்டில் அமைச்சின் ஊடக அலகிற்கு வழங்கப்பட்டிருந்தன. பின்னர் பிரமரின் அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட PMO/2/17பொது மற்றும் 2020 ஜுன் 29 திகதிய கடிதம் பிரகாரம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் பிரதமரின் ஊடக அலவிற்கு அச் சொத்துக்களை வழங்கியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | இணைக்கப்பட்ட போதும் 2022.05.17 திகதி முதல் மீண்டும் இந்த அதிகார சபைக்கு அறிக்கையிடுவதற்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளார். | |

**3.10 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது முயற்சிகள் தொடர்பான நல்லாட்சிக்கான வழிகாட்டி (பீஈடீ - 12) இன் 9.3.1 பந்தி பிரகாரம் மற்றும் 2006 செப்டம்பர் 22 திகதிய இலக்கம் 30 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 திகதிய இலக்கம் 06/2006 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் அதிகார சபைக்கு செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வு முறையொன்றை அறிமுகம் செய்திருக்கவில்லை. மேலும், பதவிகளை புதிய சம்பள கட்டமைப்பொன்றில் நிருவிய பின்னர் அதனை செயற்படுத்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமொன்றை தயாரித்து அதற்காக அமைச்சின் மற்றும் பொது முயற்சிகள திணைக்களத்தின் பரிநதுரை மற்றும் தேசிய சம்பள மற்றும் ஊழியர் புள்ளிவிபர ஆணைக்குழுவின் அங்கீகாரத்தையும் 2022 மே 31 வரை பெற்றிறுக்கவில்லை. | அதிகார சபைக்கு செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வு முறை ஒன்றையும் உள்ளடங்களாக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமொன்றை தற்போது தயாரித்து, அதற்காக அதிகார சபை முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தையும் வரிசை அமைச்சின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்ட பின்னர் அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அதிகார சபைக்கு செயலாற்றுகையை அடிப்படையாக்க கொண்ட பதவி உயர்வு திட்டவொன்றும் உள்ளிட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமொன்றை தயாரித்து உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் வெற்றிடமாக காணப்படும் பதவிகளிற்காக உள்ளக அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. | 2019.06.25 திகதிய அதிகார சபையின் முகாமைத்துவ சபை தீர்மானத்தின் மீது 2018 – 2022 மூலஉபாய திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான சேவைகள் | ஊழியர் எண்ணிக்கை தொடர்பான மறுசீரமைப்பை மேற்கொண்டு ஆட்சேர்ப்பு பதவி உயர்வு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு பதிலாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அதிகார சபையின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான மறுசீரமைப்பு செய்யப்படாததால் அதிகார சபையின் ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரித்துக் கொண்டதன் பின்னர், அவ் ஆட்சேர்ப்பு திட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் மாத்திரம் நிறுவனத்தின் ஆளணிக்காக பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவித்திருந்தது. எனினும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் மீது புதிய 10 பணிப்பாளர் பதவிகளிற்கு மற்றும் 10 அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டை பூர்த்தி செய்து கொள்ள பணிப்பாளர் பதவிகளுக்கு 10 அலுவலர்கள் பதவி உயர்வு வழங்கப்பட்டனர். முாகமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |
| (இ) | 2008 ஜுன் 26 திகதிய இலக்கம் 14/2008 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 திகதிய இலக்கம் பீஈடி/1/2015 கொண்ட போது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் தனிப்பட்ட வாகனத்தை தனது உத்தியோக பூர்வ வாகனமாக பயன்படுத்தும் அலுவலர்களுக்கு அதிகார சபையின் சாரதிகளை பயன்படுத்த முடியாது. அவ்வாறாயினும், அதிகார சபையின் 20 அலுவலர்கள் தனது வாகனங்களிற்கு சாரதிகளை ஈடுபடுத்தி, அச் சாரதிகளுக்கு மேலதி நேர படிகள் மாத்திரம் கடந்த ஆண்டில் ரூபா 3.67 மில்லியனும் மீளாய்வாண்டில் ரூபா 8.26 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. | அதிகார சபையில் தற்போது உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படாத அலுவலர்களுக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்ள அதிகார சபையின் இணையத் தளத்தில் மற்றும் சிலுமின்ன பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரித்து, விலைமனு கோரப்பட்டுள்ளது வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொண்ட பின்னர் இந்த தனிப்பட்ட வாகனங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அதிகார சபையின் இரண்டு அலுவலர்களின் துர்நடத்தை தொடர்பாக குற்றப் பத்திரிகை வழங்கி அது தொடர்பாக முறையான ஒழக்காற்று விசாரணை நடாத்தி அக் குற்றங்களிற்கு ஒரு பகுதியினர் குற்றவாளியாக அந்த ஒழுக்காற்று அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக் | மீண்டும் சேவையில் சேர்க்குமாறு மேல்முறையீடு முன்வைக்கப்பட்டதுடன், அந்த ஒழுக்காற்று கட்டளையை திருத்துவதற்காக சுயாதீன மேல்முறையீட்டு விசாரணை ஒன்றை நடாத்த தீர்மானிக்கப்பட்டது. பின்னர் அதிகார சபையின் ஒழுக்காற்று அதிகாரியாக | முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டிருக்கையில் முறைமையின் பிரகாரம் அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குற்றங்கள் தாபன விதிக்கோவையின் இரண்டாம் பகுதியின் கீழான பாரதூரமான துர்நடத்தை ஆகையால் பதவியிலிருந்து விழக்க வேண்டிய போதும் வயது 60 இற்கு கிட்டியதென கவனத்திற் கொண்டு அவ் அலுவர்கள் 2017 ஆண்டில் கட்டாய ஓய்வுபெறச் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்றை நடாத்தி குற்றவாளிகளான அவ் இரண்டு நபர்களையும் சரியான முறைமையை பின்பற்றாது 2019 / 2020 ஆண்டுகளில் மீண்டும் சேவையில் சேர்க்கப்பட்டிருந்தனர். | பொறுத்தமான நடவடிக்கை ஒன்றை எடுக்குமாறு கிடைத்த வரிசை அமைச்சின் ஆலோசனையின் மீது குறித்த ஒழுக்காற்று விசாரணையை முறையாக நடாத்தப்பட்டுள்ளனவா என வெளிப்படைத் தன்மையுடன் விசாரிக்க அவ் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்ட பிரிவுரைகளை மீள் பரிசீலிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டது. | |
| (உ) | மாதாந்த சம்பளம் பெறும் அலுவலர்கள் முகாமை சபை கூட்டங்களுக்கு சமுகமளிக்கையில் படிகளை பெற முடியாத போதும் முன்னால் தவிசாளர் பணிப்பாளர் நாயகம் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர்கள் சுற்றறிக்கைக்கு மாற்றமாக 2015 மார்ச் மாதம் முதல் 2020 ஒக்டோபர் வரை ரூபா 3.2 மில்லியனான படிகளை பெற்றிருந்தனர். கணக்காய்வினால் சுட்டிக் காட்டியதன் பின்னர் தொடர்ந்தும் படிகளை செலுத்துவதை நிறுத்தி இருந்த போதும் முன்னர் செலுத்திய படிகளை அறவிட்டிருக்கவில்லை. | இப் படிகளை மீள் அறவிட தேவையான முன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் அங்கீகார படிகளை மாத்திரம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | அதிகார சபையின் அங்கீகார ஆளணி குறிப்பு பிரகாரம் அங்கீகரிக்கப்படாத 64 பதவிகளிற்காக பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பம் கோராது அதிகார சபையின் கீழுள்ள துணை கம்பனி ஒன்றினூடாக 64 ஊழியர்களை அதிகார சபையின் சேவைக்கு ஆட்சேர்த்து சம்பளம் மற்றும் படிகளாக 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் முறையே ரூபா 43.52 மில்லியன் மற்றும் ரூபா 46.34 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே அத் துணை கம்பனியான நகர | முகாமை சபை அங்கீகாரத்தின் மீது 2019.08.08 திகதி அதிகார சபையின் இணையத் தள பக்கத்தில் நகர் ஆக்கக் கலைஞர் மற்றும் அதிகார திட்டமிடலாளர் பதவி வெற்றிடங்களிற்காக அறிவித்தல் பிரசுரித்து விண்ணப்பம் கோரப்பட்டது. விண்ணப்பதாரர்கள் மொரட்டுவ கல்கலைக் கழகத்தின் மூலம் எழுத்துமூல பரிசோதனைக்கு பங்குபற்றச் செய்ததுடன் 2019.09.09 மற்றும் 2019.09.17 திகதிகளில் | நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப அங்கீகார ஊழியர் எண்ணிக்கையினுள் உள்ளடங்கும் ஊழியர்களை மாத்திரம் ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| முதலீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பனிக்கு அதிகார சபையின் 08 அலுவலர்களை இரட்டை அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். | நேர்முகப் பரீட்சையும் நடாத்தி அப் பதவிகளிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம்; PED/12 இன் 5.1.2 பந்தி பிரகாரம் 2019 – 2021 இற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் அக் கூட்டிணைந்த திட்டத்தில் ஒவ்வொரு வருடத்திலும் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை வெவ்வேறாக இனங்கண்டிருக்காததுடன் செயற்பாடுகளின் ஆரம்ப திகதி மற்றும் முடிவுத் திகதி, நிதி ஏற்பாடுகள், எதிர்வரும் 3 ஆண்டுகளிற்கான மீளாய்வொன்று, மனிதவன மற்றும் முகாமைத்துவ திறன்கள் மற்றும் அவ்வப் பிரிவுகளினால் மேற்கொள்ளும் செயற்திட்டங்கள் எவையென விடயங்களை இனங்கண்டிருக்கவில்லை. | அதிகார சபையினால் தயாரித்துள்ள கூட்டிணைந்த திட்டம் (2022 – 2025) மேற் குறிப்பிட்ட தகவல்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்களாக சரியாக முகாமை செய்ய தேவையானவாறு தயாரிக்கப்பட வேண்டும். |

**4.2 முகாமைத்துவ தகவல் கட்டமைப்பின் ஆக்கபூர்வமானதன்மை**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தற்போது நிலவும் முகாமைத்துவ கணக்கீட்டுத் தொகுதியை நிறுவ ரூபா 8.3 மில்லியனும், 2022 ஜுலை 22 வரையளவில் பராமரிப்பு மற்றும் சேவைகளிற்கான சேவை ஒப்பந்தத்தின் கீழான 02 சேவைகள் ஒப்பந்தங்களின் கீழ் இரண்டு வருடங்களுக்காக ரூபா 2.16 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இம் முகாமைத்துவ கணக்கீட்டுத் தொகுதியின் மூலம் 2019 | இத் தகவல்களை கணக்கீட்டு தொகுதியினூடாக பெற்றுக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய மேம்படுத்தல்கள் விரைவில் மேற்கொள்ளப்படும். | முகாமைத்துவ கணக்கீட்டு தொகுதி அதிகார சபையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக் கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டும். |

திசெம்பர் 31 திகதியிற்கான விரிவான வருமானக் கூற்றும் மற்றும் நிதி நிலைமைக் கூற்று, கடன்படுனர்/கடன்கொடுனர் காலப்பகுப்பாய்வு, கடன்படுனர்/கடன்கொடுனர் இணக்க அறிக்கை, வருடாந்த தேய்மான கணக்கீடு, VAT Schedules (உப அலுவலகங்கள் உள்ளடங்களாக), முதலீட்டு ஆதன பதிவேயொன்று, வழங்கப்பட்ட காலப் பகுதிக்கான நிலையான வைப்பு பதிவேடொன்று, மறுக்கப்பட்ட காசோலை அட்டவணை, வங்கி இணக்கக் கூற்று ஆகிய அறிக்கைகளை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**4.3 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆண்டில் குப்பை மேடு சரிவின் பின்னர் மீதொட்டமுல்லை புனர்ஜீவன செயற்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பூங்காவொன்றை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவ் குப்பை மேட்டை நிலைப்படுத்த (trial compaction) 30 மீற்றர் முதல் 12 மீற்றர் வரை மட்டம் செய்து பிலன்கட் லேயரொன்றை இடல் மற்றும் பச்சை வீட்டு வாய்வு பரிசோனை அலகொன்றை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை ரூபா 269.5 மில்லியனுக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு 2020 ஜுன் 09 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்கு ரூபா 432.94 மில்லியன் தொகையொன்று அதிகார சபையினால் செலுத்தியிருந்ததுடன் 2020 நவம்பர் 25 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்து ஒப்படைக்கும் சான்றிதழையும் விநியோகித்திருந்த போதும் திட்டமிடடவாறு பூங்கா ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலைப்படுத்தப்பட்ட | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தேசிய கட்டிடங்கள் ஆரசாய்ச்சி நிறுவனத்தின் தொழிநுட்ப விஞ்ஞான ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் குப்பை மேட்டை நிலைப்படுத்தல் அதன் கழிவு நீரை (Leachate) முறைப்படி திரட்ட மற்றும் குழாய்த் தொகுதியை நிர்மாணிக்கும் கட்டம் 1 யை பூர்த்தி செய்தல் மற்றும் உட்பகுதியில் உருவாகும் தீங்கிழைக்கும் வாயுவை சூழலிற்கு விடுவிக்க உத்தேசிக்கப்பட்ட (Gas Well) 31 குழாய்களில் 08 இனை நிறுவுதல் மற்றும் குப்பை மேட்டின் 5 சதவீதமளவான பகுதியொன்றை ஆரம்ப செயற்திட்டமாக மண் படலையொன்றினால் மூடப்பட்டுள்ளது அதற்காக அதிகாரசபை தற்போது ரூபா 455 மில்லியன் அளவு கிரயமொன்றை | செயற்திட்டத்தை தேவையான முன்நடவடிக்கைகளை மேற்கொண்டு முறையாக பூர்த்தி செய்ய வேண்டும். |

குப்பைகள் அமைந்துள்ள இடத்தை தற்போது உரிய முகாமைத்துவத்துடன் மற்றும் மேற்பார்வையின்றி நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. மேலும், இவ்விடத்தில் நிருவப்பட்டுள்ள வெளியாகும் கழிவு நீரை கால்வாய்களுக்கு மற்றும் நிலக்கீழ் நீரிற்கு ஒன்றுசேர்வதை தவிர்க்கும் மற்றும் தொடர்ந்து வாயு பரிசோதனை மத்திய நிலையத்தினூடாக எரிவாயு ஒன்றுதிரட்டும் தொகுதியும் புற்கள் முளைத்து கைவிடப்பட்டுள்ளதாக 2021 திசெம்பர் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது

மேற்கொண்டுள்ளது.

எஞ்சிய வேலைப் பகுதியை பூர்த்தி செய்ய அரச மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள மற்றும் தேவையான பெறுனர் நடைமுறையை தற்போது ஆரம்பித்துள்ளது.

இக் குப்பை மேட்டை முற்றாக மீள்சுழற்சி செய்து மேற் குறிப்பிட்டவாறு பொது வசதிகளுடன் கூடிய வழங்கல் (Logistic) மத்திய நிலையமொன்றாக இம் முழுக்காணியையும் அபிவிருத்தி செய்ய முதலீட்டு சபையினால் முன்வைத்துள்ள முதலீட்டு செயல்திட்டத்தை செயற்படுத்த உள்ள இயழுமை ஆய்வு செய்யப்படுகின்றது.